Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



'எரிக் கணேஷ்'
பல் மூக்குக் கண்ணாடி அகம்
566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- சங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்

'எரிக் கணேஷ்' (ச-1802)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 04 (29.11.2003) சனிக்கிழமை இதழ் :60

# பிரதமர் ரணிலுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து நெருக்கடியைத் தீர்க்க சந்திரிகா இணக்கம்!



மாவீரர் தினத்தன்று திருமலை - சேனையூரில் உள்ள துயிலும் இல்லத்தில திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் பொதுச் சுடர் ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.

## அடுத்த வாரம் உடன்படிக்கை கைச்சாத்து?

(கொழும்பு)

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை தீர்க்கும் வகையில் அடுத்த ஒரு வருடத்துக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள ஜனாதிபதி சந்திரிகா உடன்பட்டுள்ளார்.**

**இதன் ஒரு கட்டமாக அடுத்த வாரம் இரு பிரதான கட்சிகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளதாக ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.**

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, தற்போதைய நெருக்கடி நிலையை தணிப்பதற்காக, பிர தமர் ரணிலின் சிபார்சுடன் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமிக்குமாறும் மலிக் சமரவிக்கிரம, மனோ தித்தவெல குழுவினருக்கு ஜனாதிபதி பரிந்துரை செய்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த முன்மொழிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் தேசிய நெருக்கடியைக் கருத்தில்கொண்டு இரு பிரதான கட்சிகளும் இணைந்து கூட்டு சமாதான செயலணியை (Joint Peace Council - J.P.C.) உருவாக்குவதெனவும்- இதன் மூலம், சமாதான முயற்சிகளை மேற்கொள்ள முடியுமெனவும், இதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணைத் தலைவர்களாக இருப்பார்களெனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சமாதான முயற்சிகளை தொடர்ந்து பிரதமரே முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனவும், பிரதமருக்கு ஏதாவது தேவையேற்படின் இந்த சமாதான செயலணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மாவீரர்தின உரை நேர்மையை வெளிக்காட்டுகின்றது

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மாவீரர்தினத்தில் ஆற்றிய உரை - அவரது அரசியல் நேர்மையையும், உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பி.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் தலைவர் ஆற்றிய உரை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தென்னிலங்கையிலுள்ள இனவாத அமைப்புக்கள் தேசியத் தலைவரையும், அவரது செயற்பாடுகளையும் சிங்கள மக்கள் மத்தியில் பூதாகாரமாகவும் விசமத்தனமாகவும் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரை தென்னிலங்கை மக்களை சிந்திக்க வைத்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர் பிரபாகரன் சமாதானத்தையே விரும்புகின்றார்

### காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரை சமாதானத்தினை விரும்புவதை எடுத்துக்காட்டுவதாக காணி அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் மாவீரர் தினத்தில் ஆற்றிய உரை தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபையை தராவிட்டால் தனியரசு உருவாகுவதை தடுக்கமுடியாது என்றும், தனியரசு என்ற கோட்பாட்டை கைவிடவேண்டுமானால் வடக்கு - கிழக்கு நிர்வாகசபை தமக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். இந்த இருவிடயங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும், தமிழீழ விடுதலைப்புலிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொமன்வெல்த் செயலாளர் பதவிக்கு



## முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு

# கொமன்வெல்த் செயலாளர் பதவிக்கு லக்ஷ்மன் கதிர்காமரும் களத்தில்!


(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசருமான லக்ஷ்மன் கதிர்காமர் கொமன்வெல்த் அமைப்பின் செயலாளர் பதவிக்கு போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

கொமன்வெல்த் செயலாளார் நாயகம் பதவிக்குப் போட்டியிட நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு லக்ஷ்மன் கதிர்காமருக்கு ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லக்ஷ்மன் கதிர்காமரின் பெயரை கொமன்வெல்த் செயலாளர் பதவிக்கு ஜனாதிபதி சந்திரிகா, பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரிடம் சிபாரிசு செய்துள்ளார். கொமன்வெல்த் செயலாளரை பிரிட்டனே நியமிக்கும் என தெரிவிக்கப்பட்டது.

கொமன்வெல்த் அமைப்பில் 51 நாடுகள் (10 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழத்தின் தேசியப் பூவாக கார்த்திகைப்பூ பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு இந்தியாவுக்கு நேற்று விஜயம்!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவொன்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளது.

இந்திய மாநிலங்களின் நிர்வாக முறைமைகள் குறித்து ஆராயச் சென்றுள்ள இந்தக் குழுவினர், நேற்றுக்காலை தமது பயணத்தை ஆரம்பித்தனர். இந்தச் சுற்றுப் பயணத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையில் தொழிற்துறை ஒத்துழைப்புக்களை அதிகரிப்பது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த விஜயத்தின்போது, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சின்ஹாவுடனும், முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு பேச்சு நடத்தும். அத்துடன் - டார்ஜிலிங், லடாக் ஆகிய பகுதிகளில் நடைமுறையில் இருக்கும் அதிகாரப் பகிர்வு முறை மூலம் சிறுபாண்மையினர் அனுபவிக்கும் நன்மைகள் குறித்தும் இக்குழுவினர் நேரில் ஆராயவுள்ளனர்.

இதுகுறித்து, தகவல் வெளி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சி இராணுவ நிலைகளுக்கு உயரதிகாரிகள் குழு நேற்று விஜயம்!

(சாவகச்சேரி)

தென்மராட்சி இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு இராணுவ உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று விஜயம் செய்துள்ளது.

நேற்றுக்காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்திற்கு உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய இந்த இராணுவ அதிகாரிகள் குழு அங்கிருந்து வாகனங்கள் மூலம் தனங்கிளப்பு, கேரதீவு, கோகிலாக்கண்டி, அறுகுவெளி ஆகிய பாதுகாப்பு நிலைகளுக்குச் சென்றனர்.

அங்கு பாதுகாப்பு நிலைமைகள் பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர். (29)

# கிறிஸ் பற்றனது கருத்துக்களை பொ.ஐ.முன்னணி வரவேற்கிறதாம்!

## கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய வெளிவிவகார ஆணையாளரான கிறிஸ் பற்றன், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து தெரிவித்த கருத்துக்களை, தமது முன்னணி வரவேற்பதாக தெரிவித்தார் கலாநிதி சரத் அமுனுகம.

நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது, கிறிஸ் பற்றன், விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்த கருத்துக்களுடன் நாம் உடன்படுகின்றோம். பற்றன் விடுதலைப் புலிகளுக்கு, இனி வருங்காலங்களில் போருக்கு மீளவும் புலிகள் திரும்பக்கூடாதெனவும், அவர்கள் அரசிடம் சமர்ப்பித்த திட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

## பத்திரிகை விற்பனையாளர் தேவை

யாழ்.மாநகரப் பகுதியின் வர்த்தக மையப் பகுதியில் பத்திரிகையை எடுத்துச்சென்று விற்பனை செய்வதற்கு தகுதி வாய்ந்த ஆண்கள் தேவை.

வயது எல்லை: 40 - 50 வருடங்கள்

விரும்புவோர் 03.12.2003 அன்று அலுவலக நேரத்தில் சமுகந்தரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆளணி முகாமையாளர்,
நமது ஈழநாடு.



## காஸ்குக்கர் (GAS COOKER) பாவனையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

- உங்கள் காஸ்குக்கர் பழுதடைந்துள்ளதா?
- துருப்பிடித்து பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதா?

பழுதடைந்த உதிரிப்பாகங்களுக்குப் பதிலாக புதிய உதிரிப்பாகங்கள் இடப்பட்டு கறள், துருப்பிடித்த பகுதிகள் முற்றாக நீக்கப்பட்டு உரிய வர்ணம் தீட்டி எவர்சில்வர் பகுதிகள் பொலிஷ் செய்துதரப்படும்.

- ஹோட்டல்களில் உபயோகிக்கப்படும் பாரிய காஸ்குக்கர் (HEAVY DUTY) நேர்த்தியான முறையில் சேவிஸ் செய்து திருத்தப்பட்டு 24 மணி நேரத்தில் மீண்டும் பாவனைக்குத் தரப்படும்.

**REPAIR, SERVICE & CALIBRATION**

தொடர்புகட்கு
க.கருணாநிதி
கனகசபாபதி ஒழுங்கை,
(நாகபூசணி ஆம்மன் கோவில் அருகாமை)
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (சி-1835)


# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## மீள் கேள்வி அறிவித்தல் - 2004

01.01.2004ந் திகதி முதல் 31.12.2004ந் திகதி வரையான காலப்பகுதிக்கு பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

- கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி - 11.12.2003 வியாழன் 14.00 மணி (2.00 மணி)
- கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி - 12.12.2003 வெள்ளி 12.00 மணி
- கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி - 12.12.2003 வெள்ளி 14.00 மணி (2.00 மணி)

| குத்தகையின் விபரங்கள் | மாதவாடகை | கேள்விப் பத்திரப்பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த தொகை (வற்வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **01. மானிப்பாய் பட்டினம்** | | | | |
| 1. மானிப்பாய் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 2000/- | 4,10, 000/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை (சந்தை) | 400/- | 300/- | 2000/- | 2,60, 000/- |
| **02. மானிப்பாய் கிராமம்** | | | | |
| 1. காக்கைதீவு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 11, 100/- |
| 2. நவாலி பிரசாத் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 75, 600/- |
| 3. சாவற்கட்டு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 1,00, 000/- |
| 4. நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 400/- | 300/- | 1500/- | 91, 000/- |
| 5. நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 300/- | 1500/- | 24, 000/- |
| 6. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | - | 300/- | 2000/- | 2, 65, 000/- |
| 7. சண்டிலிப்பாய் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 25, 000/- |
| **03. பண்டத்தரிப்பு பட்டினம்** | | | | |
| 1. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | | | | |
| மாட்டிறைச்சிக் கடை இல. 02 | 250/- | 300/- | 1500/- | 35, 000/- |
| ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 15, 000/- |
| கருவாட்டுக்கடை இல. 01 | 250/- | 300/- | 1500/- | 7,500/- |
| கருவாட்டுக்கடை இல. 02 | 250/- | 300/- | 1500/- | 7,500/- |
| **03. பண்டத்தரிப்பு கிராமம்** | | | | |
| 1. மாசியப்பிட்டி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 78, 000/- |
| 2. இளவாலை பொதுச் சந்தை | - | 300/- | 1500/- | 60, 000/- |
| 3. மாசியப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 5, 000/- |
| 4. மாசியப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 35, 000/- |
| 5. மாதகல் சந்தை - மாட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 10, 000/- |
| 6. மாதகல் சந்தை - ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 5, 000/- |
| 7. பெரியவிளான் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 5, 000/- |

மேலதிக விபரங்களை மானிப்பாய் பட்டின/ கிராம உப அலுவலகத்திலும், பண்டத்தரிப்பு பட்டின/ கிராம உப அலுவலகத்திலும் பிரதேச சபை தலைமைச் செயலகத்திலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

வலி. தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்,
27.11.2003

பிரான்சிஸ் விக்டர்,
செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டப இலக்கம் 2 இல் நடைபெற விருந்த க.பொ.த (சா/த) பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

## புலமைப்பரிசில் கருத்தரங்கு

யாழ் கல்வித்திணைக்கள அனுசரணையுடன் தரம் 5 மாணவர்களுக்கான இலவச, இறுதிக் கருத்தரங்கு இன்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை மேல்மாகாணசபை ஆசிரிய ஆலோசகர் தஅம்பிகைபாகனால் நடாத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்கள் பைல் மட்டையுடனும், மதியபோசன ஏற்பாட்டுடனும் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் பரீட்சை வழிகாட்டி வினாத்தாள்கள் வழங்கப் படவிருப்பதால் மாணவர்கள் 60 ரூபா பணமும் கொண்டுவருதல் வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

## பரிசளிப்பு விழா

(மானிப்பாய்)

நல்லூர் கல்விக்கோட்ட பாடசாலைகளின் பரிசளிப்பு விழா இன்று பி.ப 2.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், தமிழீழக்கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (100)

## பரிசளிப்பு விழா

(மானிப்பாய்)

யாழ் • இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பாடசாலையின் அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (100)


## தவறிவிட்டது

சின்னத்துரை கலைமகள் ஆகிய எனது 728034092V இலக்கத்தையுடைய அடையாள அட்டை தொலைந்துவிட்டது. இந்த அடையாள அட்டையை கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சின்னத்துரை கலைமகள்
இறப்பு பிறப்பு பதிவாளர்
இல்லம்
இமையாணன்
(536) உடுப்பிட்டி

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிவாஜி, அர்ஜீன் நடித்த
மன்னவரு சின்னவரு
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
2 FAST 2 FURIOUS

ராஜா யாழ்ப்பாணம்.
லக்கிஸ்ரார் அஜித், மீராஜஸ்மின், கபாலி நடித்த
ஆஞ்சநேயா
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-1751)

# வர்த்தக வங்கிகளின் மூலமாகவும் திறைசேரி உண்டியல்களை மாற்றலாம்!

## நாடாளுமன்றில் சட்டமூலம் அங்கீகரிப்பு

(கொழும்பு)

திறைசேரி உண்டியல்களை வர்த்தக வங்கிகள் மூலமாகவும், இனிவரும் காலங்களில் மாற்றமுடியும். நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் விவாதத்தின்போதே, இந்த விடயம் வாக்கெடுப்பின்றிச் சட்டமூலமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரைகாலமும், திறைசேரி உண்டியல்களை - அரச வங்கிகள் மூலமாக மட்டுமே மாற்றிக்கொள்ளக்கூடியதாகவிருந்தது. இந்த நிலையைமாற்றி, வர்த்தக வங்கிகள் மூலமாகவும்- திறைசேரி உண்டியல்களை மாற்றக்கூடிய நடைமுறைகள் கொண்டுவரப்படவேண்டுமென நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி பிரேரணையொன்றைச் சபையில் சமர்ப்பித்தார்.

இந்தப் பிரேரணையை ஜே.வி.பி உள்ளிட்ட பல கட்சிகளும் ஆதரித்தமையால், வாக்கெடுப்பின்றி இது சட்டமூலமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்த்து, இலகுவான நடைமுறைகளை மேற்கொள்ளவிரும்பும் தமது அரசின் திட்டத்தின் ஒரு கட்டமாகவே, இது அமைந்துள்ளதாகப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய நிதியமைச்சர் - சபையில் தெரிவித்தார்.

வற்வரி மூலம், அரசு 5,500 மில்லியன் ரூபா நிதியை வருமானமாகப் பெற்றுக்கொள்ள உத்தேசித்திருப்பதாகவும், அதனாலேயே, பத்து சதவீதமாக இருந்த வற்வரி பதினைந்து சதவீதமாகவும், இருபது சதவீதமாக இருந்த வற்வரி பதினைந்து சதவீதமாகவும் மாற்றப்பட்டது. இம்மாற்றம் வரிச்சமநிலையைப் பேணுவதற்காகவே மேற்கொள்ளப்பட்டது. வற்வரி மீதான மாற்றம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தாது. அவற்றின் விலைவாசிகள் ஒருபோதும் அதிகரிக்கப்படமாட்டாது எனவும் நிதியமைச்சர் தெரிவித்தார். (01)

# கிராமப்புற மின் விநியோகம் தொடர்பாக இலங்கை - சீனா இடையே ஒப்பந்தம்!

கிராமப்புறங்களுக்கு மின்னிணைப்புக்களை வழங்குவது தொடர்பாக, சீன அரசுக்கும் - இலங்கை அரசுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. சீன சபாநாயகர் ஜியாங் சிங் லிண்ட் இன் இலங்கைக்கான விஜயத்தின் போதே, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது சீன சபாநாயகர் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியதாகவும், அதன் பின்னரே இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கிராமப் புறங்களில் முன்னெடுக்கப்படும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் சீன அரசின் பங்களிப்பு தொடர்பாகவும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் சரித்த ரத்வத்த கைச்சாத்திட்டுள்ளார். இதன் பிரகாரம், சீன அரசு இலங்கைக்கு 2880 மில்லியன் ரூபா நிதியுதவி அளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வட - கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைக்கு கனேடிய நிறுவனம் ஐம்பது கோடி நிதியுதவி

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அத்தியாவசிய சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக கனேடிய அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று, சுமார் 50 கோடி ரூபா வரையிலான நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் ஒரு கட்டமாக - கிளிநொச்சி, மன்னார், வவுனியா முதலான மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கென 50 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

மிதிவெடி அகற்றும்போது ஏற்படக்கூடிய ஆபத்துக்களிலிருந்து பணியாளர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டே, மருந்துப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் வைத்திய உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டதாக, கனேடியப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ராயூசி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காகவே, இத்தகைய உதவிகளை வழங்கக் கனேடிய அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும், இத்தகைய உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான 5 லட்சம் அனுமதி அட்டை தபாலில் சேர்ப்பு

## பரீட்சை திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தவருட க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான பரீட்சை - நாளை மறுதினம் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டதாகச் சம்பந்தப்பட்ட பரீட்சை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பரீட்சைத் திணைக்களம் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் -

இம்முறை பரீட்சை எடுக்கும் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கும், தனியார் பரீட்சார்த்திகளுக்குமாக சுமார் ஐந்து லட்சம் பேருக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. நாடு தழுவியரீதியில் 3800 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

இதேவேளை, இந்த வருடம் நடைபெறவுள்ள தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை - எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறுமெனவும், இதற்கு மூன்று லட்சம் மாணவர்கள் தோற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பரீட்சையின் மீள்திருத்தல் பெறுபேறுகள் - ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், விரைவில் மாணவர்களுக்கு அனுப்பப்படுமெனவும் - பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் மகிந்த விஜயசிறி தெரிவித்தார்.

இதேவேளை, சுமார் இருபத்தையாயிரம் விண்ணப்பங்கள் - நாடு தழுவியரீதியில் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், இவற்றில் நூற்றுக்கு ஒரு மாணவரின் பரீட்சைப் பெறுபேறுகள் மாற்றமடைந்து காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய அரசாங்கத்தை அமைத்தால் ஐ.தே.மு. அடையாளத்தை இழந்துவிடும்

## அமைச்சர் எம்.எச்.முகமட் எச்சரிக்கை

தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு இணங்கினால், ஐக்கிய தேசிய முன்னணி தனது அடையாளத்தை இழந்துவிடும் ஆபத்து இருப்பதாக, அமைச்சர் எம்.எச்.முகமட் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் அமைச்சர் முகமட் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோது -

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் எந்த உறுப்பினரும் கிடையாது. பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களே இருக்கின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினது கை சின்னம் மாறி, இப்போது கதிரையாகிவிட்டது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தேசிய அரசொன்றை அமைப்பதற்கு காலம் இன்னும் கடந்துவிடவில்லை!

## சரத் அமுனுகம தெரிவிப்பு

தேசிய அரசொன்றை அமைப்பதற்கான காலம் இன்னும் கழிந்துவிடவில்லை. அவை தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெற்றவண்ணமேயுள்ளன என, பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தற்பொழுது முக்கிய மூன்று விடயங்கள் ஆராயப்பட்டுவருகின்றன. சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை வளர்ச்சிநிலைக்கு கொண்டுசெல்லல், பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துதல் ஆகிய விடயங்களே தற்போது முக்கியமாக ஆராயப்பட்டுவரும் விடயங்களாகும்.

இது தொடர்பாக, ஜனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாட்டை தோற்றுவிக்கும் நோக்கில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மூன்றாவது வரவு-செலவுத்திட்ட வாசிப்பு 38 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது!

ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு, 38 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 126 வாக்குகளும், எதிராக 88 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, புளொட் ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணி, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, மதனராஜன் ஆகியோர் வாக்களிப்பு நேரத்தில் சபையிலிருக்கவில்லை.

பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பியும் எதிர்த்து வாக்களித்தன. வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாசிப்பு எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.(01)





மாவீரர் நாளன்று மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான நினைவுச் சுடரை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றுவதை முதற்படத்திலும், மட்டு - தரவை துயிலுமில்லத்தில் பொதுச்சுடரை மூத்த தளபதி கேணல் கருணா ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ஜனாதிபதி-பிரதமர் இணைந்து உருவாக்கிய குழு அபிவிருத்தி பணிகள் தொடர்பாக இணக்கப்பாடு!

## 4 முக்கிய விடயங்களில் உடன்பாடு காணப்பட்டது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து உருவாக்கிய மனோ தித்தவெல - மலிக் சமரவிக்கிரம குழுவினர் நாட்டின் அபிவிருத்தி கருதி, நான்கு முக்கிய விடயங்களில் இணக்கப்பாடு கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு கட்சிகளும் இணைந்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்தல், நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தல், நாட்டின் அடிக்கட்டுமானத்தை உருவாக்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தல் போன்ற நான்கு விடயங்களிலேயே இணக்கம் ஏற்பட்டுள்ளதாக, ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரான மனோ தித்தவெல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னரேயே இந்த உடன்பாடு ஏற்பட்டதாகவும், தற்போது இணக்கம் காணப்பட்ட உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதற்கு தேவையான நிர்வாகம், கட்டுமானப் பணிகளை இந்தக் குழு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணலாம் என்பதில் - ஜனாதிபதியும், பிரதமரும் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவித்த மனோ தித்தவெல-

அண்மையில் ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்கள் தொடர்பாக இந்தக் குழுவில் பேசப்படவில்லையெனவும், ஜனாதிபதியால் அந்த அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டமை அரசியல் யாப்பிற்கு உட்பட்டதுதான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## பிரிட்டன் விஸாவுக்கு

# கைவிரல் அடையாளமிடுவது தொடர்பான வழக்கு விசாரணை ஜனவரி 23 இல்!

பிரிட்டன் விஸாவிற்கு கைவிரல் அடையாளம் வைப்பது தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணை - அடுத்தவருடம் ஜனவரி மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென, உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கினை பொதுஜன முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மற்றும் அவரது இணைப்பாளர் ஆகியோர் தொடுத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக - வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதியின் செயலர் ஆகியோர் விளக்கமளிக்கவேண்டுமென உயர்நீதிமன்றம் கேட்டுள்ளது.

# தலைவரின் சிந்தனையில் விடுதலைக்காக அயராது உழைத்தவர் அப்பையா அண்ணன்

## நினைவுக்கல் திறப்புவிழாவில் இளங்குமரன் தெரிவிப்பு

தேசியத் தலைவரின் சிந்தனைக் கமைவாகத் தேசத்தின விடுதலைக்காக அயராது உழைத்தவர்தான் மூத்த உறுப்பினர் லெப்.கேணல் அப்பையா அண்ணன் எனக் கடந்த திங்கட்கிழமை விசுவமடுவில் நடைபெற்ற மாவரர் அப்பையா அண்ணரின் நினைவுக்கல் திரை நீக்க நிகழ்வில் கலந்து, வீரவணக்க உரையாற்றுகையில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - அப்பையா அண்ணர் எமது விடுதலை இயக்கத்தில் ஆரம்பகாலத்தில் இருந்து, தொடர்ச்சியாக இருபது ஆண்டுகள் இந்த மண்ணின் விடுதலைக்காகப் போராடியவர். இந்த விடுதலைப் போராட்டம் - இளைஞர்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் உரிய ஒன்று என்பதை எடுத்துக் காட்டும் வகையில் செயற்பட்டவர்.

கவிஞர் காசி ஆனந்தனின் அறிமுகத்துடன், 1978 ஆம் ஆண்டில் எமது விடுதலைப் பேராட்டத்தில் இணைந்துகொண்ட அப்பையா அண்ணர், தலைவருக்கு மிகவும் நம்பிக்கையுடையவராகச் செயற்பட்டதுடன், எமது இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பெரும்பங்காற்றியவர்.

காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வந்த தமிழினம்- ஆயுதம் ஏந்திப் போராடுவதன்மூலம்தான் தனக்கான உரிமையை வென்றெடுக்கமுடியும் என்பதில் அசையாத நம்பிக்கை வைத்திருந்தவர். இவர் போராட்டத்தில் இணைவதற்கு முன்னதாவே, தேசத்துரோக செயல்களில் ஈடுபடுவோர்களைத் தாக்கி, அழிக்கவேண்டும் என்ற எண்ணங்கொண்டு, அப்போது இயங்கி வந்த பல்வேறு ஆயுதக்குழுக்களுக்கு - தேசத்துரோகிகளை அழிக்க ஒத்துழைப்பு வழங்கிச்செயற்பட்டார். ஆனாலும், அவர்கள் அப்பையா அண்ணரின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யவில்லை.

இதனால், விரக்தி அடைந்த இவர் - நூலகங்களுக்குச் சென்று, அங்கு வெடிபொருட்கள் தொடர்பாக எழுதப்பட்ட நூல்களைக் கற்று, துரோகிகளை அழிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தான், எமது தலைவரின் வழிநடத்தலில் இயங்குகின்ற விடுதலைப்புலிகள் அமைப்பின் செயற்பாடுகளில் விருப்பம்கொண்டு, அதில் தானும் இணைந்துகொண்டார்.

அப்பையா அண்ணனை வைத்து, எமது விடுதலை இயக்கத்தின் படைக்கல உருவாக்கத்தை மேற்கொண்டோம். இவர் வயது கூடியவர் என்றாலும், விடுதலைக்கான செயற்பாடுகளில் மிகவும் உறுதியாகவும், சுறுசுறுப்பாகவும் செயற்பட்டார். ஆரம்பகாலங்களில் தாக்குதல் தளபதியாக இருந்த சாள்ஸ் அன்ரனியின் கீழ் நடைபெற்ற பெருமளவான தாக்குதல்களில், அப்பையா அண்ணர் பங்கு கொண்டு சிறப்பாகச் செயற்பட்டார்.



எமது விடுதலைப் பேராட்டத்திற்குப் பெரும் வெற்றியையும், பலத்தையும் சேர்த்துத்தந்த திருநெல்வேலி கண்ணிவெடித் தாக்குதலில் - பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டு, அவர்கள் பயணித்த வாகனமும் பல அடிகளுக்கு மேலாக தூக்கி வீசப்பட்ட அத்தாக்குதலுக்கான வெடிபொருளை - அப்பையா அண்ணனே உருவாக்கியிருந்தார். இது போன்ற பல தாக்குதல்களில் அவர் நேரடியாக பங்குபற்றிக் கொண்டிருந்தார்.

1983 ஆம் ஆண்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கான தயார்படுத்தலில், இவர் மிகவும் திறமையாகச் செயற்பட்டவர்.

புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் விரிவடைந்து செல்லச்செல்ல, அதற்கேற்றவகையில் இவரது பங்களிப்பு - தாக்குதல் நடவ்டிக்கைளில மிகவும் முக்கியமானதாக இருந்தது. 1983, 1984 ஆம் ஆண்டுகளில் போது, தாக்குதல்கள் மிகவும் கடுமையானதாக இருந்தது.

1984 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தை, முகாமிற்குள் முடக்கி, அப்பகுதிகளை எமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்த அந்த தாக்குதல்களில், அப்பையா அண்ணனின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

இவரின் தாக்குதல் வரலாற்றைக் கூறுவதாக இருந்தால், எமது போராட்ட வரலாற்றை முற்றுமுழுதாக கூறிவிடவேண்டும். இந்திய இராணுவம் எமது பகுதியில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில், அப்பையா அண்ணனைப் பிடித்துவிட்டால், எமது ஆயுத உற்பத்தியை முடக்கிவிடலாம் என்று கருதியநிலையில், இந்திய இராணுவம் இவரை கடுமையாகத்தேடியது. அவ்வளவிற்கு இவரின் பணி முக்கியமானதாக அமைந்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் - இன்று மூத்தமாவீரராக மாறிவிட்டார் என மேலும் தனது உரையில் தெரிவித்தார்

# திடற்புலப் பிரதேசத்தில் திரைப்படத்தால் பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

திடற்புலம் பிரதேசத்தில் பொது இடங்களில் வைத்து தினமும் இரவு வேளைகளில் காண்பிக்கப்படுகின்ற, தென்னிந்தியத் திரைப்படங்களால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இங்கு தினமும் காண்பிக்கப் படும் திரைப்படங்களைப் பார்த்து விட்டு, மாணவர்கள் பாடசாலைக் குச் சென்று அங்கு நித்திரை செய் வதாகவும், கற்றல் செயற்பாட்டில் ஆர்வம் இல்லாது இருப்பதாகவும், ஆசிரியர்களால் வழங்கப்டுகின்ற வீட்டுவேலைகளைச் செய்யாது வருவதாகவும் பாடசாலை ஆசிரியர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள ஒளிநிலா சனசமூக நிலையத்தினரிடம் பாடசாலை நிர்வாகம் - மாணவர்களது செயற்பாடு தொடர்பாக முறையிட்டதனைத் தொடர்ந்து, சனசமூக நிலையத்தினர் - கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதாக நிலையத்தலைவர் தெரிவித்தார்.(83)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இராமநாதன் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவுரையும் - இன்று கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் கௌர விருந்தினராகக் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும். சிறப்பு விருந்தினராகக் கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுபபாளர் கவியன்பனும் கலந்துகொள்ளவுள்ளனர். (91)



இளவாலை திருமறைக் காலமன்றம் - அண்மையில் நடத்திய நாடகப் போட்டியில் பங்குபற்றிய நாடகத்தின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம். (71)

### பாலர் கல்விக் கழக கலைவிழா

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் பதினாறு பாலர்பாடசாலைகள் ஒன்றிணைந்து நடாத்தும் வருடாந்த கலைவிழா - இன்று காலை 9 மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளன.

பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் ஆசிரியர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்து சமய விவகார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து 16 பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான ஒரு போட்டி நிகழ்ச்சி நடாத்தப்பட்டு, பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. அத்தோடு, சிறுவர்களின் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

### சனசமூக நிலையம் திறப்பு விழா

பன்னாலை கணேசா சனசமூக நிலைய புனரமைப்பு செய்யப்பட்டு, திறப்பு விழா - இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக - வலி.வடக்கு பிரதேச செயலர் க.குணராஜாவும், கௌரவு விருந்தினராக நாடாளு மன்ற உறுப்பினர் ரவிராஜும் கலந்து சிற்பிக்க உள்ளனர். (72)

### விடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலை படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித்தொடரில் "கன் பர் ரீட்" நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'RANSOM' எனும ஆங்கிலப்படம் - தமிழ்த் துணைத் தலைப்புக்களுடன் காட்டப்படும்.

அத்துடன், "கதைசொல்லிகள்" என்ற விவரணப்படமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

## வாழ்க வளமுடன்

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

#### முதலாவது அகவையில்



பெயர் : சு.பவிநயா
முகவரி : மருதடி வீதி, சாவகச்சேரி.

பெயர் :செ.பிரியதர்சன்
முகவரி : இமையாணன், அறிலாவயம்.





பெயர் : த.பர்மிசா
முகவரி : அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

#### மூன்றாவது அகவையில்

பெயர் : பி.தபேந்திரா
முகவரி : வராகி அம்மைன் வீதி, கொக்குவில் மேற்கு.



#### எட்டாவது அகவையில்



பெயர் : மா.உமாராஜ்
முகவரி : பிள்ளையார் கோவிலடி, அராலி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------
முகவரி :-----------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------
பெற்றோர் ஒப்பம்

# யாழ்.செயலகத்தில் இன்று இலக்கியத்தேடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய தேடல் நிகழ்வொன்று, நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இலக்கிய ஆய்வுமன்றமானது, நாளை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இடம்பெறும்.


ஓய்வுபெற்ற நிர்வாகசேவை அதிகாரி தி.திருலிங்கநாதன் இந்தத் தேடல் ஆய்வுமன்றில் கருத்துரைகளை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கழைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் படைப்பாளிகளின் ஆக்கங்கள் மற்றும் புதிய படைப்புக்களின் எண்ணவோட்டங்கள் என்பன குறித்து ஆராயப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## புறாக்களை உருவாக்குவோம்




## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

1. குமார், கவிதா, மாலா மூவரும் அடுத்தடுத்த வீடுகளில் வசிக்கும் நண்பர்கள். ஒருநாள் கவிதாவின் தாத்தா எட்டு கிலோகிராம் திராட்சைப்பழங்களைக் கொண்டுவந்தார். கால்கிலோ, அரைக்கிலோ, முக்கால்கிலோ என்று மூன்று வகையான எடைகளுள்ள எட்டுப் பைகளில் திராட்சை பழங்கள் இருந்தன. தாத்தா குறும்புக்காரர். அவர் சொன்னார்- பழப்பைகளை எதற்காகவும் பிரிக்கக்கூடாது. அதேசமயம் ஒருவரைவிட மற்றவர் அதிகமாகவோ, குறைவாகவோ எடுக்காமல், சமமான அளவில் பங்குபோட்டுக் கொள்ளவேண்டியது உங்களுடைய பொறுப்பு என்றார்.

பையைப் பிரிக்கமுடியாது. எட்டை (8) மூன்றால் (3) பிரிக்கமுடியாது. அவர்களுக்கு முடியவில்லை. உங்களைக் கேட்கிறார்கள். உதவுங்கள். எட்டுப் பைகளிலும் எந்தெந்த அளவுகளில் திராட்சைப் பழங்கள் இருந்தால், அவர்கள் மூன்று பேரும் எடுத்திருக்கமுடியும். எப்படி மூன்று பேரும் தமக்குள் பிரித்திருப்பார்கள். கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

### கணிதப் புதிர்

1. 1 முதல் 9 வரையுள்ள ஏதாவதொரு எண்ணை எட்டு (8) முறை உபயோகித்து, 1000 வரவழைக்கமுடியுமா? முடியும். 1 என்ற எண்ணை எட்டுமுறை உபயோகித்து, 1000 வரவழைக்க முடியும். அதேபோல் 2,3,4,5,6,7,8,9 என்ற எண்களையும் தனித்தனியே எட்டுமுறை உபயோகித்து 1000 வரவழைக்க முடியும்.

கூட்டலாம், கழிக்கலாம், பெருக்கலாம். கணிதக் குறியீடுகள் அனைத்தையும் உபயோகிக்கலாம். முயன்று பாருங்கள்.

2. கூட்டல் குறியீட்டை மட்டும் உபயோகித்து 8 என்ற எண்ணை எட்டுமுறை உபயோகித்து 1000 வரவழைக்கமுடியும். முயன்று பாருங்கள்.

(விடைகள் அடுத்தவாரம்)

### சென்றவார விடைகள்

1. விடையே 'விடுகதை' தான்.

2. கணிதம்
கடிதம்
காந்தம்
தந்தம்

## பொது அறிவு

1. இலங்கையில் அதிகமாக மழைவீழ்ச்சி கிடைக்கும் இடம் - வட்டவளை
2. மனிதர்கள் முதலில் கண்டுபிடித்த உலோகம் எது - செம்பு
3. உலகில் மிகப்பெரியதீவு எது - கிறீன்லாந்து
4. ஆறுகள் இல்லாத நாடு எது - சவூதி அரேபியா
5. நீண்ட நாக்குள்ள கோழி எது - தீக்கோழி

கீ.அச்சுதன்
தரம் 5
டிரிபேக் கல்லூரி

இங்கே மடிக்கவும்






# சிறுவர் அரங்கம்

## தந்திரத்தால் பூனையைக் கொன்ற எலிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

"மிகவும் நல்ல யோசனை. இன்று இரவு இருவரும் போவோம்" என்றது அண்ணா எலி.

அன்று இரவு பக்கத்து வீட்டு எலியும், அண்ணா எலியுமாகச் சேர்ந்து, நஞ்சு கலந்த சுட்ட கருவாட்டைக் கவனமாக எடுத்துவந்தன. தாம் இருக்கும் வீட்டு முகட்டில் - சுட்ட, நஞ்சு கலந்த கருவாட்டை வைத்துவிட்டு, பக்கத்து வீட்டு எலியுடன் பரமேஸ்வரனின் வீட்டுப்பக்கம் சென்றது அண்ணா



எலி.

முற்றத்தில் பூனையும், நாயும் விளையாடிக் கொண்டிருந்தது நிலவு வெளிச்சத்தில் தெரிந்தது. "பூனையும், நாயும் விளையாடிக் கொண்டிருக்கின்றன. நாம் வந்தது அவற்றிக்குத் தெரியாது. நீ போய்க் கருவாட்டை எடுத்துக்கொண்டு விரைவாக வா" என்றது பக்கத்து வீட்டு எலி.

அண்ணா எலி கருவாட்டைக் கவனமாக எடுத்துவந்து, பரமேஸ்வரனின் வீட்டுக்கூரையில் வைத்துவிட்டு, "கீச்.... கீச்" என்று பலமாகக் கத்தியது. மணியுடன் விளையாடிக் கொண்டிருந்த பூனை - எலி கத்தும் சத்தம் கேட்டதும், விளையாடுவதை விட்டுவிட்டு கூரையின் மீது ஏறியது. இதை எதிர்பார்த்திருந்த பக்கத்து வீட்டு எலியும், அண்ணா எலியும் துள்ளிக் குதித்து ஓடிவிட்டன.

பூனை மேலே ஏறிவந்தது. சுட்ட கருவாட்டின் வாசம் அதன் மூக்கைத் துளைத்தது. பரமேஸ்வரன் வீட்டார் மாமிசம் சாப்பிடுவதில்லை. அத்துடன், எலிகள் வெளியேறியமையால் பல நாட்களாக ஊண் உண்ணாதிருந்த பூனையின் வாயில் உமிழ்நீர் ஊறியது. அதனால், ஆவலுடன் பூனை கருவாட்டை உண்டது.


மறுநாட்காலை முற்றத்தில் இறந்து கிடந்த பூனையைக் கண்ட காகங்கள் பலமாகக் கரைந்தன . கஜேந்திரனும், அபிராமியும் இறந்து கிடந்த பூனைக்கருகில் இருந்து அழுது கொண்டிருந்தனர். பரமேஸ்வரன் வேப்பமரத்தின் கீழ் கிடங்கு வெட்டி, பூனையின் உடலைப் புதைத்தார். இவற்றை கூரையில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த பக்கத்து வீட்டு எலியும், அண்ணன் எலியும் மகிழ்ச்சியால் துள்ளின.

பூனை இறந்ததைத் தாத்தா எலி நம்ப மறுத்தது. அதனால், அது அன்று இரவு பரமேஸ்வரனின் வீட்டுக்குச் செல்லப் பயந்தது. அண்ணன் எலியும், தங்கை எலியும், அம்மா எலியும், பக்கத்து வீட்டு எலியும் சென்று, தாத்தா எலியை அழைத்து வந்தது. பக்கத்து வீட்டு எலி அதன் பின்பு அவர்களுடன் தங்கிவிட்டது. பின் தங்கை எலிக்கும், பக்கத்து வீட்டு எலிக்கும் திருமணம் நடைபெற்றது. தமது வீரத்தால் வென்ற எலி - தமது இனத்தவர்களுடன் பரமேஸ்வரன் வீட்டில் மகிழ்வுடன் வாழ்ந்தன. (முற்றும்)

கே.வி.குணசேகரம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### எதியோப்பியா




| | |
|---|---|
| தலைநகர் | - அடிஸ் அபாபா |
| பரப்பளவு | - 10,97,000 ச.கி.மீ. |
| நாணயம் | - டிர் |
| மொழி | - அம்ஹாரிக், கலிங்கா |
| சமயம் | - கிறிஸ்தவம், இஸ்லாம் |
| முக்கிய நகரங்கள் | - ஹரார், கோண்டார், ஜிம்மா |
| சராசரி ஆயுள் | - |
| ஆண் | - 42.5 |
| பெண் | - 44.4 |

எதியோப்பியா ஒரு வட-கிழக்கு ஆபிரிக்கா நாடாகும். இந்த நாடு மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. மலைகள் எரிமலைக் குழம்பினால் உருவானவை. இந்த மலைப்பகுதிகளில் அரிய தாவரங்களும், மூலிகைகளும் கிடைக்கின்றன. நாட்டின் பெரும் பகுதி மணற்பாங்கான பிரதேசமாகவுள்ளது. ஆபிரிக்காக் கண்டத்தின் கிரேட் ரிவ்ட் (Great Rift) என்ற பள்ளத்தாக்கு இந்த நாட்டைக் கடந்தே செல்கிறது.

ஆபிரிக்காக் கண்டத்தில் எகிப்துக்கு அடுத்தபடியாக பழம்பெரும் நாகரிகம் கொண்ட நாடு இதுவாகும். முன்பு இந்த நாட்டின் பெயர் அபிசீனியா என்று இருந்தது.

தொடரும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் எதியோப்பியா - 1984 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் பஞ்சத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் இலட்சக்கணக்கான எதியோப்பியக் குடிமக்கள் பட்டினியால் இறந்தார்கள். தலைநகரின் பெயரான 'அடிஸ் அபாபா' என்பதற்கு ' புதிய மலர்' என்று அர்த்தம். இந்த நாட்டின் மொத்த வருமானத்தில் 60 சதவீதம் கோப்பியினால் கிடைக்கின்றது. மதியூக மன்னர் சாலமன் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.

இந்த நாட்டின் முக்கிய விளைபொருட்களாக கோதுமை, பார்லி, கரும்பு, பருத்தி, கோப்பி ஆகியன விளங்குகின்றது.



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் : கு.சிஷாந்தன்
கற்கும் பாடசாலை :
சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம்
தரம் : 6
ஆர்வமுள்ள துறைகள் :
கிரிக்கெட், உதைபந்தாட்டம், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் : ச.சுபகரி
கற்கும் பாடசாலை :
சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம்
தரம் : 4
ஆர்வமுள்ள துறைகள் :
சங்கீதம், கலைத்துறை, கணிதம்.

முழுப்பெயர் : வ.நிதர்சன்
கற்கும் பாடசாலை :
ஜெயபுரம் மகா வித்தியாலயம்
தரம் : 5
ஆர்வமுள்ள துறைகள் :
கட்டுரை எழுதுதல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர் : க.துவாரகன்
கற்கும் பாடசாலை :
இந்து ஆரம்பப் பாடசாலை
தரம் : 4
ஆர்வமுள்ள துறைகள் :
புத்தகம் வாசித்தல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் : பு.ஜனனி
கற்கும் பாடசாலை :
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
தரம் : 8
ஆர்வமுள்ள துறைகள் :
சங்கீதம், கதைப்புத்தகம் வாசித்தல், சமூகக்கல்வி.

முழுப்பெயர் : பா.அனுஷியா
கற்கும் பாடசாலை :
மயிலணி சைவ மகா வித்தியாலயம்
தரம் : 4
ஆர்வமுள்ள துறைகள் :
சிறுகதை வாசித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர் : சி.சந்திரராஜ்
கற்கும் பாடசாலை :
புங்குடுதீவு மகா வித்தியாலயம்
தரம் : 8
ஆர்வமுள்ள துறைகள் :
கவிதை, ஆக்கங்கள் எழுதுதல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் : ..............................
கற்கும் பாடசாலை : ..............................
கற்கும் தரம் : ..............................
வீட்டு முகவரி : ..............................
பிறந்த திகதி : ..............................
ஆர்வமுள்ள துறைகள் : ..............................
..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்



**அன்புச் சிறுவர்களே!**

இனி பாடசாலை விடுமுறைக் காலம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விடுமுறையைச் சந்தோஷமாகக் கழிக்க முயற்சிப்பீர்கள். உங்களில் பலர் தொலைக்காட்சி பார்ப்பதில் நேரத்தைச் செலவிடுவீர்கள். இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியூடாகக் கல்வி சார்ந்த விடயங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள், உலகத்தின் எங்கோ ஓர் மூலையில் நடக்கும் சம்பவங்கள் என்று பல்வேறுபட்ட விடயங்களை உங்கள் வீடுகளிலிருந்து பார்க்கக்கூடியதாக இருக்கிறது. அப்படித்தானே? ஆனால், தொலைக்காட்சி பார்ப்பதில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. அதைப்பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

பாசமுடன் -சாரு அக்கா

இங்கே மடிக்கவும்



# நோய் - உணவுக்கான ஒரு போராட்டமே

உலகிலுள்ள உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்தே உயிர்வாழ்கின்றன. தாவரங்களைத்தவிர, ஏனைய உயிரினங்கள் உணவுக்காக அடுத்த உயிரையே நம்பியிருக்கவேண்டியுள்ளது. இது இயற்கை நியதி. மனிதன் காய்கறி, பழங்கள், பறவைகள், மிருகங்கள் போன்றவற்றை உணவாக உட்கொள்கிறான். பெரியமீன்-சிறிய மீனை உண்ணுகிறது. பூச்சி, புழு, நுண்ணுயிர்கள் - உணவுக்காகப் பெரிய உயிரினங்களான மரம், விலங்குகள் மற்றும் மனிதனைத் தாக்குகின்றன.

இந்த நுண்ணுயிர்கள் உருவில் சிறியவை. அத்துடன், கண்ணுக்குப் புலப்படாதவைகள். எனவே, பெரிய விலங்குகள் மற்றும் மரங்களை விழுங்கமுடியாது. அவற்றின் உடலில் ஒட்டி, கொஞ்சம்கொஞ்சமாகத் தமக்குத்தேவையான உணவை எடுத்துக்கொள்கின்றன. இதனால், பெரிய உயிர்களுக்கு வலியும், பாதிப்பும் ஏற்படுகிறது. இதனைத்தான் நாம் 'நோய்' என்று அழைக்கிறோம். எம்மைப் பாதிக்கும் உயிரினங்களைக் கிருமிகள் என்கிறோம். எனவே, நோய் என்பது ஒரு உயிரின் உணவுப்பிரச்சினையாகும்.

## முதல் மாணவன்




நன்றி ரிங்கிள்

## விடுகதைகள்

- அண்ணனும் தம்பியும் இரண்டுபேர். அவர்களைச் சுற்றிலும் பன்னிரண்டு பேர். அது என்ன?
- சின்னத்தம்பி சிவப்புத்தம்பி, திறந்தவாய் மூடாத தம்பி. அவன் யார்?
- அழுத்தி அழுத்தி மிதித்தால், அலறித் துடித்து ஓடும். அது என்ன?
- இந்த ஊரிலே அடிபட்டவன், அடுத்த ஊரிலே போய் சொல்லுவான். அவன் யார்?
- உயிரில்லாத நீதிபதி, ஒழுங்காக நியாயம் சொல்லுகிறார். அவர் யார்?
- ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர். என்ன நீர்?
- திரியில்லாத விளக்கு, உலகம் எங்கும் ஒளிர்கிறதாம். அது என்ன?
- ஆயிரம் பேர் அணிவகுத்து போனாலும், வந்த சுவடு தெரியாது. அது என்ன?

**விடைகள்**

1.கடிகாரம் 2.தபாலோட்டி 3.சைக்கிள் 4.தந்தி
5.தராசு 6.கண்ணீர் 7.சூரியன் 8.எறும்பு


## பாடி மகிழ்வோம்




மாரிகாலம் வந்தது
மழையும் பிடித்துக் கொண்டது.
கோடை காலம் வந்தது
கொளுத்தும் வெயிலும் வாட்டுது.
குளிர்காலம் பிறந்தது
போர்வை தேடச் சொன்னது.
வசந்த காலம் வந்தது
வண்ண மலர் பூக்குது.

சு.சுவேந்தினி
தரம் - 3
பளை மத்திய கல்லூரி.

## உங்கள் கைவண்ணம்



ப.நிஜங்கன்
தரம் -9
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



அ.சஞ்சீவ்
தரம் -9
டிறிபேர்க் கல்லூரி.

## ஆண்டுகளின் முடிவில் எடுக்கப்படும் விழா

25 ஆவது ஆண்டு விழா - வெள்ளிவிழா
50 ஆவது ஆண்டு விழா - பொன்விழா
60 ஆவது ஆண்டு விழா - மணிவிழா
75 ஆவது ஆண்டு விழா - முத்துவிழா
80 ஆவது ஆண்டு விழா - அமுதவிழா
100 ஆவது ஆண்டு விழா - நூற்றாண்டு விழா

சி.கிசோத்
தரம் - 5
கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து*
*வாழ்வாரில் வன்கணார் இல்.* -திருக்குறள்.

## நமது நோக்கு

## கிறிஸ் பற்றனும், இனவாதிகளும்

ஐரோப்பிய யூனியனின் ஆணையாளர் கிறிஸ் பற்றன் அவர்கள் சிங்கள இனவாத சக்திகளான சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி.ஈ, சிஹல உறுமய உட்பட பல அமைப்புக்களினதும் கடுமையான கண்டனங்கள் எதிர்ப்புகள் அனைத்தையும் புறந் தள்ளிவிட்டு, வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும், ஏனைய முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசியது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக மட்டுமல் லாது, இனவாத சக்திகளுக்குப் பெரும் அவமானத்தையும் தோல்வியையும் ஏற்படுத்திவிட்ட சம்பவமாகவும் ஆகிவிட்டது.

கிறிஸ் பற்றன் அவர்களின் வன்னிக்கான விஜயத்திற்கு யார் அனுமதியை வழங்கியது என ஆக்ரோஷமாக கேள்வி எழுப்பிய இனவாதிகளின் ஓலங்கள் கிணற்றில் எறிந்த கல்லாக அமிழ்ந்துவிட, அவர்களின் செயற்பாடுகளை அலட்சியம் செய்த பற்றன் அவர்கள் "எங்கும் அமைதிவழிமுறையை எதிர்ப்பவர்கள் இருக்கவே செய்கிறார்கள்... இவர்கள் எரித்த எனது கொடும் பாவியின் உருவம் சற்று அழகாகவே இருந்தது. அதற்காக அவர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன்" எனக் கூறியமையா னது ஒரு இராஜதந்திரிக்கே உரிய கிண்டலையும், கேலியையும் வெளிப்படுத்தியிருந்தது.

அவரின் இந்தக் கூற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திய கும்ப லுக்கு அவர் வழங்கிய மதிப்பீட்டு உரையாகவும் அமைந்தது.

அவரது விஜயத்தினை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இந்த விஜயம் தமது இறைமையுள்ள நாட்டிற்கு மிகப்பெரும் அவமானமாகும் எனவும் கூச்சல் போட்டவர்கள் பற்றனின் இந்தக் கருத்துரைக்கு என்ன கூறப்போகிறார்கள்.

இந்தக் கூச்சல் கும்பலுக்கு தலைமைவகித்தவர்களின் மனோபாவம் எப்படிப்பட்டது என்பதை எவருக்கும் விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

மிகவும் மோசமான, மூன்றாம்தர, ஜனநாயக எதிர்ப்பு மற்றும் சமாதான விரோத சிந்தனையின் பாற்பட்ட இவர்கள் தம்மைத் தேசியவாதிகள் என்றும், தேசபக்தர்கள் என்றும், சுயவிளம்பரம் செய்துகொள்வதுதான் நகைச்சுவையான விடயம்.

தமிழ் மக்களின் நியாயமான போராட்ட உணர்வுகளைப் புறந்தள்ளிவிட்டு அவர்களின் அரசியல் உரிமைகளை நிராகரிப் பது தான் தேசபக்தி, அவர்களுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப்படுத்துவதுதான் தேசியவாதிகளின் பண்பு என தொலை நோக்கு சிந்தனையற்ற கோட்பாடுகளைக்கொண்ட இவர்களின் பின்னால் பௌத்த தர்மத்தைக் காப்பவர்கள் எனக் கூறிக் கொள்ளும் பிக்குகளும், அறிவுஜீவிகளும் கும்பல் சேருவதுதான் பரிதாபகரமானதாகும்.

இவர்களுக்கு தலைமைதாங்கியவர்களில் முன்னணியில் திகழ்ந்த மற்றொரு முக்கிய பிரமுகர் அர்ஜுன ரணதுங்க ஆவார். உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்ட சிறிலங்கா கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர். சர்வதேச கௌரவம் பெற்றவர். தனது விளையாட்டுத் திறமையால் உலகெங்கும் பெருமளவில் ரசிகர்களைக் கொண்டவர் இப்படிப்பட்ட இவர், ஒரு விளை யாட்டு வீரனுக்குரிய கண்ணியமான கம்பீரத்தைத் தொலைத்து விட்டு ஒரு சமாதான விரோதக் கொள்கைகளைக் பின்பற்றும் மூன்றாம் தர இனவாத அரசியல்வாதியாகத் தன்னை அடையா ளப்படுத்த முனைந்திருப்பது அவரின் விளையாட்டு முகத்திற் குப் பின்னாலுள்ள மற்றொரு விபரீத முகத்தைக் காட்டுவதாக வுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் ஊழல் குற்றச் சாட்டுக் குள்ளான அமைச்சராக விளங்கிய றெஜிரணதுங்கவின் மக னான அர்ஜுன ரணதுங்க, தந்தையின் அரசியல் வாதித் தனங்களுக்கு அப்பாற்பட்ட, ஒரு மதிப்பிற்குரிய சர்வதேச புகழ்மிக்க விளையாட்டு வீரனாக கௌரவத்துடன் நிலைத்து நிற்பதைத்தவிர்த்து, ஒரு இனவாத அரசியல்வாதியாகத் தன்னை அடையாளம் காட்டியுள்ளமையானது சிறிலங்காவில் சகல மட்டங்களிலும், விளையாட்டுத்துறை உட்பட, சகல துறைகளிலும் இனவாத விஷம் ஊறியுள்ளதையே உணர்த்து வதாக உள்ளது.

தொலைக்காட்சியில் கிறிஸ் பற்றனுக்கு எதிரான ஆர்ப்பாட் டப் பேரணியில் அர்ஜுன ரணதுங்கவும் தலைமைதாங்கி வந்ததைப் பார்த்த அவரது தமிழ் ரசிகர் ஒருவர்.... இப்படி ஒரு மோசமான இனவாதி - சமாதான எதிர்ப்புவாதிக்கு தான் ரசிகனாக இருந்ததற்காக வெட்கப்பட்டுக் கொண்டார்.

முன்னதாக கிறிஸ் பற்றன் கூறியதாகக் குறிப்பிட்ட 'எங்கும் அமைதிவழிமுறையை எதிர்ப்பவர்கள் இருக்கவே செய்கி றார்கள்' என்ற கூற்றை நினைவிற் கொண்டால், அர்ஜுன ரணதுங்கவின் தற்போதைய தரிப்பிடத்தைப் புரிந்து கொள்வது கடினமல்ல.

'நான் சந்தித்த அரசியல் தலைவர்கள் அனைவருமே வடபகுதி சென்று, விடுதலைப்புலிகளின் தலைவரை சந்திக்கவே விரும்புகிறார்கள்' எனக் கிறிஸ் பற்றன் கூறியதை வைத்தாவது இந்த இனவாதக் கும்பல் சர்வதேச அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

அண்மையில் சிஹல உறுமயவின் முக்கியஸ்தர் ஒருவர், தற்போது சிறிலங்காவிலுள்ள சிங்கள அறிவுஜீவிகள், பௌத்த மதகுருமார், அரசியல் ஆய்வாளர்கள், தேசிய உணர்வுள்ள இளைஞர்கள் அனைவரும் இன்றைய சமாதானத்துக்கு எதிரான தேசபக்தர்கள் அணியில் அதாவது சிஹல உறுமயவில் இணைந்து கொள்கிறார்கள் எனக் கூறியிருந்தார்.

அப்படியானால் இவர்கள் அனைவருமே இனவாதிகளாக போர் வெறியர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அர்த்தமாகும்.


சிறிலங்காவில் இனவாதிதான் தேசபக்தனாக இருக்க முடியும் என்றதுதான் அரசியல் யதார்த்தம் போலும்.

அப்படியானால் கிறிஸ் பற்றன் அமைதி வழிமுறையை எதிர்ப்பவர்களே தனக்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்கள் என்று கூறியதும் சரியானதே ஆகும்.

## நாடும் நடப்பும்



*செய்தி:-* தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை - தென்பகுதி அரசியல் தலைமைகளையும், சர்வ தேச சமூகத்தையும் சமாதானம் குறித்து ஆழமாகச் சிந் திக்க வைத்துள்ளது - அரசியல் நோக்கர்கள்.



# மாவீரர்தின நிகழ்வுகளைப் பார்த்து நாம் மனம் நெகிழ்ந்து போனோம்!

## தென்னிலங்கை வர்த்தகர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் குரல்- ஒரு பயங்கரவாதிக்குரிய குரல் அல்ல. தமிழ் மக்கள் மீது அவர் வைத்துள்ள பாசக்குரல். இவ்வாறு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வர்த்தகரான நிஸங்க பிரியதாஸ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வில் கலந்து கொண்ட இந்த வர்த்தகர், எமது செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

மாவீரர்தின நிகழ்வைப் பார்த்தபொழுது மனம் நெகிழ்ந்து போனேன். இந்த நிகழ்வைப் பார்க்கும்போது ஆச்சரியமாகவும், கவலையாகவும் இருக்கின்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் - கொட்டும் மழையிலும் கலந்துகொண்டமை, தமது உரிமையைப் பெறுவதில் அவர்கள் கொண்டுள்ள அக்கறைகளையும், உணர்வுகளைய்யும் வெளிப்ப டுத்தியுள்ளனர்.

முன்னைய காலங்களில் மாவீரர்தின நிகழ்வுகள் என்றால் எமக்குப் பயம். புலிகள் எங்கே, எப்போது இராணுவ முகா மைத் தாக்குவார்கள் என்று. ஆனால், தற்போது பயம் நீங்கிவிட்டது. இந்த நிலைமை இனியும் தொடரவேண்டும் என்று எனக்கு நிறைய ஆசை.

மாவீரர்களின் கல்லறைகளை கட்டியணைத்து தமது பிள்ளை களை நினைத்து உருகுவதைப் பார்க்கும்போது, எனது மனதை உருக்கியது. தமிழ் மக்கள் தமது உரிமையை பெறுவதற்காக ஒன்றுதிரண்டு நிற்பதைப் பார்க்கும்போது பெருமை அடை கின்றேன்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு பயங்கர வாதி என்றே நான் அறிந்திருந்தேன். தென்னிலங்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் பிரபாகரனை ஒரு பயங்கரவாதி யென்று கூறியுள்ளனர். அது முற்றிலும் தவறானது என்று நான் உணர்கிறேன். அவரது குரலை வானொலியில் கேட்ட போது, பயங்கரவாதிக்குரிய குரலாக இல்லை. அவரது குரல் தமிழ் மக்கள் மீது அவர் கொண்டுள்ள பாசத்தையே வெளிப் படுத்தும் குரலாகவே நான் உணர்கிறேன். பிரபாகரன் உரை தொடர்பாக தமிழ் தெரிந்த நண்பர் ஒருவரிடம் கேட்டேன். அவர் சமாதானத்தை விரும்புவதாக கூறியுள்ளார். அதனைக் கேட்க எமக்குச் சந்தோசமாக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

# அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றமையால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் வர்த்தகர்கள் தெரிவிப்பு

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பெறுப்பேற்ற பின்னர், நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக, தென்னிலங்கை வர்த்தக பிரமுகர்கள் - ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சந்தித்து, கலந்து ரையாடியபோதே, அவர்கள் இதனை ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மணித்தியாலம் வரையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பல முக்கிய வர்த்தகப்பிரமுகர்களும் கலந்து கொண்டனர். ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப்போட்டிகள் காரணமாகச் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமன்றி, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியிலும் ஒரு அச்சவுணர்வு தோன்றியுள்ளது.

இதன் காரணமாக, இலங்கையில் முதலீடுகளை மேற் கொள்வதற்கு அவர்கள் தயங்குகிறார்கள். இதனால், பொரு ளாதார அபிவிருத்தி பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது. அத னால், 2001 ஆம் ஆண்டு தற்காலிக யுத்த நிறுத்த உடன் பாடு அமுலுக்கு வந்தவுடன், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி நிலைகண்டது.

அவ்வப்போது தளம்பல் நிலைகாணப்பட்டாலும், பாரிய பின்னடைவுகள் எதிர்கொள்ளப்படவில்லை எனவும், இவர்கள் தமது சந்திப்பின்போது, ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறி யுள்ளனர்.

கடந்த நவம்பர் 4 ஆம் திகதி ஜனாதிபதி - பாதுகாப்பு, ஊடக, உள்துறை அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமையால், பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் புள்ளி விபரங்கள் மூலம், ஜனாதிபதிக்கு வர்த்தகப்பிரமுகர்கள் விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியும், பிரதமரும் நாட்டு நலன்கருதி பொது இணக்கப்பாடொன்றை எட்டவேண்டுமெனவும், இவர்கள் ஜனாதி பதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்களுக்குப் பதில ளித்த ஜனாதிபதி - சமாதான முயற்சிகள் ஒருபோதும் தடைப் படாது எனவும், பொருளாதார வீழ்ச்சிகள் சீர்செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் ஏற்பட்டால், நாடு மேலும் பொருளாதாரரீதியிலான பின்னடைவுகளை சந்திக்குமெனவும், அதனால் தேர்தல் ஒன்றை ஏற்படுத்தாது, இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் ஜனாதிபதி - வர்த்தகர்களிடம் எடுத்துக்கூறியதாகத் தெரியவருகிறது. (01)

# கலாசரா விழாவை முன்னிட்டு யாழ். நகரில் மாபெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள யாழ் மாவட்ட கலாசார விழாவை முன்னிட்டு, யாழ் நகரில் மாபெரும் பண்பாட்டுப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

வண்ணார்பண்ணைச் சிவன் ஆலயத்தில் இருந்து பி.ப.1 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பேரணியானது, அங் கிருந்து கன்னாதிட்டிச் சந்தியை அடைந்து, கஸ்தூரியார் வீதி ஊடாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து, பின் மணிக்கூட்டு வீதியூடாக யாழ் வீரசிங்கம் மண்டபத்திற்குச் செல்லவுள்ளது.

"நாமும் நமக்கோர் நலியாக்கலையுடையோம்" என்னும் மகாகவி உருத்திரமூர்த்தியின் கூற்றைப் பிரதிபலிப்பதாகப் பல்வேறு பாரம்பரிய கலையம்சங்களை உள்ளடக்கியதாக இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

இன்றைய மேடை நிகழ்வுகளில் - கிராமியப்பாடல், நாட்டிய நடனம், கரகாட்டம், பட்டிமன்றம், காவடி, ஒயிலாட்டம், வட மோடிக்கூத்து முதலான பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன. (ப)

# சமாதானம் நோக்கிய பயணத்தில் இணையும் எழுத்தாளர்கள் கலைஞர்கள்

சமாதானத்தை வலியுறுத்தி அண்மையில் திருமறைக் கலாமன்றம் - கலைஞர்கள், எழுத்தாளர்களுக்கான சந்திப்பொன்றைக் கொழும்பில் நடாத்தியிருந்தது. சுதந்திர சதுக்கத்திலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், நாடு முழுவதிலுமுள்ள பல பிரபலமான எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் கருத்து வெளியிட்டவர்களுடைய கருத்துக்களின் முக்கியமான பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.

**டபிள்யூ.ஜே.ரி.எஸ்.கவிரட்ண**
**தென்மாகாண ஊடகவியலாளர் சங்கம்**

'கடந்தகால அரசியல்வாதிகளின் தவறுகளின் காரணமாகவே, இனப்பிரச்சினை உருவானது. இன்றும் அவ்வாறானதொரு நிலைமையே காணப்படுகின்றது. இதன்காரணமாக எதிர்காலத்திலும் இரத்தக் களரிகள், மனிதப் படுகொலைகள் நிகழுமாக இருந்தால், அவையனைத்தையும் அரசியல்வாதிகள்தான் பொறுப்பேற்கவேண்டும். இன்றுள்ள நிலைமைகளைப் பார்த்தால், நாளை என்ன நிகழுமெனக் கூறமுடியாதுள்ளது.




துன்பத்தை அனுபவிக்காதவர்கள், வேதனையின் ஆழத்தை அனுபவிக்காதவர்கள் - இன்று இனவாதத்தை கக்குகிறார்கள். தங்கள் கதிரைகளைவிட்டு, ஓடிவட அகலாதவர்கள் - இனவாதத்தை வலியுறுத்தி எழுதுகிறார்கள்.

நான் யாழ்ப்பாணம் சென்றபோது, விடுதலைப் புலிப் போராளிகளைச் சந்தித்தேன். அப்போது அவர்கள் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்கள். சமாதானத்துக்கு ஆதரவான பிரசாரங்கள் தென்னிலங்கையில் நடைபெறுகின்றனவா என. அந்தக் கேள்விக்கு என்னால் பதில்சொல்ல முடியாதிருந்தது.

தென்பகுதியிலே சமாதானத்துக்கு எதிரான பிரசாரங்களை நிறையவே காணமுடிகிறது. ஆனால், அவ்வாறான எந்தவொரு பிரசாரத்தையும் வடபகுதியில் காணமுடியாதுள்ளது. இதனால், தென்பகுதியிலே சார்ந்தவன் என்றவகையிலே, எனக்குள்ளே ஒரு குற்றவுணர்வு எழுகிறது.

**காலிரன்டி.ரொசைறோ**
**பத்திரிகை எழுத்தாளர்**



மனித உரிமைகள் மதிக்கப்படுவதற்கு அனைவரும் உழைக்கவேண்டும். தேசிய நோக்கத்தை வலுவூட்டக்கூடிய சிந்தனைகள் உருவாக வேண்டும். இவற்றை உருவாக்குவதற்குப் பொறுமை, இடைவிடாத உறுதி, மனத்துணிவு என்பன நிறையவே வேண்டும் பார்வையிலே ஒழுக்கம், இரக்கம் இருக்கவேண்டும். அரசியற் தலைவர்களை வலுப்படுத்தக்கூடாது. எம்மை நாம் வலுப்படுத்தவேண்டும்.

அரசியற்கட்சிகள் ஒவ்வொன்றும் விட்டுக்கொடுப்பு, நேர்மை, நம்பகத்தன்மை என்பவற்றைக் கடைப்பிடித்து, வருங்கால சந்ததிக்கு வழிகாட்டவேண்டும். சில்லறை சச்சரவுகளுக்கும், மனக்கசப்புகளுக்கும் இடமளிக்கக்கூடாது. இந்த நாட்டினுடைய அரசியல் வரலாற்றிலே இலட்சியவாதிகள் நிறையவே உருவாகவேண்டும். பிழையானவற்றை எதிர்க்கவும், சரியானவற்றைச் செய்யவும் துணிவு வேண்டும்.

இலங்கையைச் சேர்ந்தோரில் பெரும்பான்மையானோர் - இரத்தம் சிந்துவதை விரும்பவில்லை. அர்த்தமற்ற வெற்றியை விரும்பவில்லை. சிலர் அரசியலில் புனித பசுக்களாக வேடமிடுகிறார்கள். தேசத்தின் நலன் - மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. அரசியல்வாதிகளால் தேசநலனுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது, மக்கள் அதனை எதிர்க்கவேண்டும். பொதுமக்களைக் கொல்லும் எந்தவொரு



புரட்சியும் வெற்றதாகச் சரித்திரம் கிடையாது. அதனை நியாயப்படுத்தவும் முடியாது.

சமாதானத்தின்பால் இலங்கை இளைஞர்கள் பற்றுறுதிகொண்டு, அதனை நோக்கிப் பயணிக்கவேண்டும். இதன் மூலமாகத்தான் அகதி வாழ்க்கை, அவல வாழ்க்கை என்பன முடிவிற்கு வரும்.

**சாம் பிரதீபன்**
**திருமறைக் கலாமன்ற இணை இயக்குநர்**

நாட்டின் சகல இனங்களும் நாடளாவிய ரீதியில் சமாதானம் தொடர்பான வழிப்புணர்வைப் பெறவேண்டும். சிறுவர்கள், இளைஞர்கள் தொடர்பாகச் சமாதான வலயங்கள் தேசிய ரீதியிலே உருவாக்கப்பட்டுள்ளன. இளைஞர், யுவதிகளுக்கான சமாதானப் பாசறைகள் பரவலாக நடாத்தப்படவேண்டும். புறச்சூழல் மாற்றங்களுக்கு ஏ-9 நெடுஞ்சாலை பாலம் அமைத்ததுபோல், அகச்சூழல் மாற்றங்களுக்குக் கலை வடிவங்கள் பாலம் அமைக்கவேண்டும்.



சமாதானக் குரல் - ஒரே குரலாய் எழவேண்டும். வெவ்வேறு சமூகங்களும், இனங்களும் இணையவேண்டும். எமது நாட்டினுடைய அரசியல் தளம்பும் அரசியலாகவே என்றும் இருந்து வந்திருக்கிறது. இது வரலாறு பகரும் உண்மையாகும். நிரந்தரமான சமாதானத்தை அடைவதற்கு விவேகமான அணுகுமுறைகளே தேவை.

கடந்துபோன கசப்பான அனுபவங்களை மறந்துவிடுவது கடினமாக 'இருந்தாலும், அவற்றை மன்னித்துவிடுவோம். குறுகிய வட்டத்திற்குள் மட்டும் நின்றுவிடாது, ஏனைய இனங்களுடன் கைகோர்த்து, அடக்கப்பட்ட எமது இனத்தின் உணர்வுகளை எடுத்துக் கூறவேண்டும்.

இதற்குக் கலைஞர்களும், எழுத்தாளர்களும் தமது வலிமையைப் பயன்படுத்தவேண்டும். அவர்கள்மூலமாகச் சொல்லப்படும் கருத்துக்கள் காத்திரமான சமாதானத்திற்கு வழிவகுக்கும். இதன்மூலம் அரசியலில் சாதகமான மாற்றங்கள் உருவாகும்.

**ஜின்னா செருபுதின்**
**முஸ்லிம் சமூக எழுத்தாளர்**

சமாதானம் உருவாக இன்று முக்கியமாக தேவைப்படுவது புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும்தான். பல ஆண்டுகளாக யுத்தம் புரிந்தவர்கள், இன்று சமாதானத்தின்பால் விருப்புக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இந்த மண்ணிலே பிறந்த ஒவ்வொரு தமிழனையும், சிங்களவனையும் எனது சகோதரராகவே நினைக்கின்றேன். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் எனும் எண்ணம் உருவாகவேண்டும். மற்றவர்களுடைய துன்பத்தையும், கஷ்டங்களையும் உணர்ந்து நாம் செயற்படவேண்டும்.

**செம்பியன் செல்வன்**
**தமிழ் எழுத்தாளர்**



வடக்கு - கிழக்கு மக்களுக்கு இந்த சமாதானம் அத்தியாவசியமான தேவையாக உள்ளது. நீண்டகாலமாகவே நாம் யுத்த வலையிலே பிடிக்கப்பட்டு இருக்கின்றோம். இன்று நாம் சமாதானம் பற்றிப் பேசுகின்றோம். இன்றுள்ள சூழல் சமாதானச் சூழலா? இல்லை. இது தற்காலிக போர்நிறுத்தக் காலப்பகுதியே. இதனையே நிரந்தர சமாதானமாக நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தற்காலிக போர் நிறுத்தங்கள் - இதுவரை காலமும் இன்னொரு போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும் காலப்பகுதிகளாகவே இருந்து வந்துள்ளன. இதனை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

எம்மையும் வாழவிடு, நாமும் வாழ்வதற்கு உரிமையுடைவர்கள். இந்த மண்ணிலே எமக்கும் உரிமை உண்டு. தேசிய ஒருமைப்பாடு பற்றி முதலிலே பேசியவர்களே, தமிழ் எழுத்தாளர்களும், கலைஞர்களும்தான். எனவே, நாம் என்றும் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்ல.

**தினேஸ் நிஸங்க**
**வடக்கு - தெற்கு ஊடகவியலாளர் சங்கம்**

கல்வி அறிவு அற்றவர்கள்தான் இன்று சமாதான விரோதச் செயல்களிலே ஈடுபடுகிறார்கள். இளைஞர்கள் என்றரீதியிலே எமது கண்ணோட்டம் அவ்வாறுதான் இருக்கின்றது. இன்று அனைவருமே தமது அரசியல் லாபங்களுக்காகக் குறுகிய சில கோட்பாடுகளைக் கொண்டுவந்து குழப்பிய வண்ணம் உள்ளார்கள்.

நாம் பிறக்கும்போது இனம், மதம், மொழி இல்லாமல்தானே பிறந்தோம். பின் பெற்றோரின் மதத்தையும், இனத்தையுமே கடைப்பிடித்தோம். சகல மதங்களுமே பிறரை நேசி என்றே பேசும்போது, நாம் ஏன் பிறரைக் கொல்லவேண்டும் என நினைக்கின்றோம். யுத்தத்தின் விளைவு அழிவாகத்தான் அமையும்.

இன்று நடைமுறையிலுள்ளது தற்காலிக யுத்தநிறுத்தம்தான். ஆனால், நாம் அனைவரும் நினைத்தால், அதனையே நிரந்தர யுத்தநிறுத்தமாக மாற்றமுடியும். இதற்காக நாம் அனைவரும் திடசங்கற்பம் பூண்டு செயற்படவேண்டும்.

இன்று சில ஊடகங்கள் மீண்டுமொரு யுத்தத்தை உருவாக்கும் வகையிலே செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இலங்கையின இளைஞர்கள் இன்று நட்டாற்றில் விடப்பட்ட நிலையிலேயே உள்ளார்கள். இனவாதிகள் - இலங்கை தீப்பற்றி எரியவேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

மனிதத்தன்மையை மனிதன் இழந்துவிட்டான். முன்னர் சிங்களவர், தமிழர், முஸ்லிம் எனும்பேதம் இருக்கவில்லை. இன்று அந்த நிலை அடியோடு மாறிவிட்டது. யுத்தவெறி பிடித்தவர்களே, இந்தநிலைக்கு வித்திட்டவர்கள்.

பேச்சுவார்த்தை மூலமான தீர்வே எமக்குத் தேவை. சமாதானம் வந்தால் சக்திமிக்க இலங்கையை எம்மால் உருவாக்கமுடியும்.

இந்த சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

1. தற்போது நாட்டில் சரியான அரசியல் அமைப்பு இல்லை. எனவே, நீதியான, சரியான அரசியல் அமைப்பு உருவாகவேண்டும்.
2. சாதாரண மக்களின் கல்வியறிவு மேம்படுத்தப்படவேண்டும்.
3. சிங்கள மக்கள் - தமிழ்மக்களை தேசிய இனமாக அங்கீகரிக்கவேண்டும்.
4. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமில்லாமற் செய்யவேண்டும்.
5. இடைக்கால நிர்வாகவரைபு, ஒஸ்லோ பிரகடனம் என்பவற்றிலிருந்தே சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படவேண்டும்.
6. பிரதேச செயலகமட்டத்தில் சமாதானம் தொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.
7. எதிர்கால சந்ததிக்கே சமாதானம் என்பதால், பாடசாலைகளிலே ஜனநாயகம், மனிதநேயம், சகோதரத்துவம் என்பன பற்றிப் போதிக்கப்படவேண்டும்.
8. சிங்கள மக்கள் - தமிழ்மொழியையும், தமிழ்மக்கள் - சிங்களமொழியையும் படிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.
9. கட்சி அரசியல் முற்றுமுழுதாக ஒழிக்கப்படவேண்டும்.
10. சிங்கள - தமிழ் கலைஞர்களிலே கலைப்பாலம் ஒன்று உருவாக்கவேண்டும். இதற்கு ஒவ்வொரு மொழிப் படைப்புக்களும், பிறமொழியிலேயே மொழிபெயர்க்கப்படவேண்டும்.
11. வடபகுதியிலுள்ள தமிழ் இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து, பேச்சுக்களை முன்னெடுக்க உதவவேண்டும்.
12. இளைஞர், யுவதிகளுடைய அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.
13. இலங்கையின் ஆட்சி, அதிகார அரசு-மதச்சார்பற்ற அரசாக இருக்கவேண்டும்.
14. அதிகாரம் எப்போதும் கீழிருந்து மேலே செல்லவேண்டும். அதாவது, குடிமக்களிடமே கூடிய அதிகாரம் இருக்க வழிசெய்தல்வேண்டும்.
15. வடக்கு - கிழக்கு யுத்த அனர்த்தங்களைத் தென்னிலங்கை ஊடகங்களிலே வெளிக்கொணர்வதற்குரிய வழிவகைகள் செய்யவேண்டும்.
16. சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களோடு மலையகத் தமிழர்களும் ஒரு இனமாகச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.
17. அனைத்து இனங்களினதும் வழிபாட்டு முறைகள், கலாசார விழுமியங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.
18. சக இன எழுத்தாளர்களது படைப்புக்களும், விரிவாக்கம் செய்யப்படவேண்டும்.
19. தென்னிலங்கை, வட - கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் உண்மைக்காக ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.
20. உயர்மட்டங்களில் நடைபெறும் சமாதானம் தொடர்பான கருத்தரங்குகளில் பேசப்படும் விடயங்கள் - மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட வழிசெய்யவேண்டும்.

**இ.சர்வேஸ்**

# தேசிய அரசாங்கம் உருவானால் தீர்வுக்கான சாத்தியம் பிறக்குமா?

*(முன்னைய தொடர்ச்சி...)*

ஆனால், தேர்தல் ஒன்று நடைபெறுவதை பொதுமக்களோ, அரசாங்கமோ, ஏன் ஜனாதிபதியோகூட விரும்புவதாகத் தெரியவில்லை என்று குறிப்பிடும் அவர் - எனவே, அத்தகைய ஒரு முடிவுக்குவராமல், இடைப்பட்ட ஒரு தீர்வை எட்ட இவர்கள் முனைவார்கள் என்றேதான் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

தேர்தல் ஒன்று நடைபெறுமானால், அது கடும் போக்காளர்களுக்கே வாய்ப்பாக அமையும். குறிப்பாக ஜே.வி.பியே அதனால் பெருமளவு இலாபமடையும் என்று குறிப்பிட்ட அவர், தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்று இடம் பெறுமானால், பொதுஜன ஐக்கிய முன்னணியை விட ஜே.வி.பி.யே அதனால் அதிகளவு இலாபம் அடையும் என்றும் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யையும், பொதுஜன ஐக்கிய முன்னணியையும்விட, ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் அதிகளவு ஆசனங்களைப்பெறும் என்று பொதுவாக நம்பப்பட்டாலும், தேர்தல் மூலம் நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. தனக்கிருக்கும் ஆசனங்களின் பலத்தை மேலும் அதிகரிக்குமானால், சமாதானத்துக்கு எதிரான பலமான ஒரு எதிரணியை நாடாளுமன்றத்துக்குள்ளேயே எதிர்கொள்ள வேண்டிய ஆபத்து ஏற்படும் என்று அவர் எச்சரிக்கிறார்.

தேர்தல் ஒன்று வருமானால், பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் மிக மோசமான இனவாத பிரசாரங்களையே முன்னெடுக்கும். விடுதலைப் புலிகளது இடைக்கால நிர்வாகசபை யோசனைகளையும் அவை கடுமையாக எதிர்த்துப் பிரசாரம் செய்யும். அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணைந்து நாட்டைப் பிரிக்கத் திரைமறைவில் சதிசெய்வதாக அவை பிரசாரங்களை முடுக்கிவிடும் என்று குறிப்பிடுகிறார் ஜெஹான் பெரேரா.

இத்தகைய பிரசாரங்கள் தமிழர்களையும், சிங்களவர்களையும் இன்னமும் பிளவுபடுத்துவதுடன், சிங்கள மக்களிடையேயும் பிளவுகளைத் தோற்றுவிக்கும் என்றும், இறுதியாகத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டினாலும், பிளவுபட்ட ஒரு மக்கள் கூட்டத்தையும், பலம் வாய்ந்த ஜே.வி.பியையுமே அதன்பின் இந்த நாடு கொண்டிருக்கும் என்றும் எச்சரிக்கிறார்.

எனவே, சமாதானத்தில் அக்கறை கொண்டுள்ள எவரும், இத்தகைய ஒரு இக்கட்டான நேரத்தில் தேர்தல் ஒன்று இடம்பெறுவதை இயன்றவரையில் தடுப்பதற்குப் பாடுபடவேண்டும் என்பதே ஜெஹானின் வாதமாக இருக்கிறது..

இப்படியான ஒரு நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில், ஜெஹான் குறிப்பிடுவது போன்ற ஆபத்துக்களைத் தவிர்க்கவேண்டுமானால்,

**கனடாவிலிருந்து அதியமான்**

அனைவரும் இணைந்து தேர்தல் ஒன்று வருவதைத் தடுப்பதுடன், சமாதான முயற்சிகள் குறித்த ஒருமித்த நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கப் பாடுபடுவதே அவசியமானதாக இருக்கிறது.

அதைச் செய்யப்போவது யார் என்பது தான் இப்போதிருக்கும் பலகோடி ரூபா பெறுமதியான கேள்வி.

# உடனடியாகத்தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல உணவகம் ஒன்றிற்கு உடனடியாக பின்வருவோர்தேவை. இன்றும், நாளை மறுதினம் திங்கட்கிழமையும் நேரில் சமுகமளிக்கவும்.

* சமையலாளர்.
* சமையல் உதவியாளர்.
* தேநீர் தயாரிப்பாளர்.
* உணவு பரிமாறுபவர்.
* சிட்டை எழுதுநர்.
* கணக்காளர்.

குறிப்பு:- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**மயூரா களஞ்சியம்**
332, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
222 6167, 222 6797
(சி/1837)


# ஜப்பானிய மூளைக்காய்ச்சல் இன்று தடுப்பூசி மருந்தேற்றல்

(மானிப்பாய்)

யாழ்.மாவட்டச் சிறுவர்களுக்கு இன்று சனிக்கிழமையும் இரண்டாம் கட்டமாக ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பகுதி மற்றும் மானிப்பாய், சங்கானை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் வதியும் சிறுவர்களுக்கு இன்று தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை - இந்தத் தடுப்பூசிகள் - குழந்தைகள் சிகிச்சை நிலையங்களில் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை வழங்கப்படவுள்ளதாகவும், கடந்த 14, 15 ஆம் திகதிகளில் முதலாம் கட்டத்தடுப்பூசி போடப்பட்ட (ஒரு வயது முதல் 3 வயதுக்குட்பட்ட) சிறுவர்கள் முன்னர் தடுப்பூசி போட்ட அதே சிகிச்சை நிலையங்களில் சென்று இரண்டாம் கட்ட ஊசியைப் போட்டுக்கொள்ளுமாறும், சுகாதாரத் திணைக்கள தொற்றுநோய் வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். அத்துடன், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும், நேற்றுத் தவறவிட்டவர்கள் இன்று தடுப்பூசி போட்டுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## ஊர்சுற்றி எழுதுவது

'இப்பொழுது நாங்கள் இனப்பிரச்சனைக்கு நல்லதொரு தீர்வு காணாவிட்டால் இன்னும் பத்து வருடங்களுக்குப் பிறகு வரும் தலைமுறை - தமிழ் மக்களுக்கு தமது தாயகத்தில் தனியரசு அமைக்கவேண்டும் என்று கேட்பதைத் தவிர்க்க முடியாது'

இப்படித் தந்தை செல்வநாயகம் 1957 ஆம் ஆண்டில் அன்றைய பிரதமரும், இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவின் தகபபனாருமான, எஸ். டபிளியூ. ஆர். டி. பண்டாரநாயக்காவிடம் எச்சரிக்கையோடு அறிவுறுத்தினார்.

தந்தை செல்வாவுடன் பிரதமர் பண்டாரநாயக்கா இனப்பிரச்சனைக்கு ஒரு சுமுகமான தீர்வு காணும்பொருட்டு இரவுபகலாக பல நாட்கள் தொடர்ந்து பேச்சு நடத்தி வந்தபோதே தந்தை செல்வா மேற்கண்டவாறு பிரதமருக்கு அறிவுரை சொன்னார்.

பண்டாரநாயக்காவும் இதையுணர்ந்து, தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் தொடர்ந்துபேசி, ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்.

பண்டா- செல்வா ஒப்பந்தமும் கைச்சாத்தானது. தமிழ் மக்கள் ஓரளவுக்கு திருப்தி அடைந்தார்கள். கல்வி, காணி, குடியேற்றம் முதலிய பொறுப்புக்கள் பிரதேச சபைகளின் அதிகாரத்தின் கீழ் இருப்பதற்கு இந்த உடன்படிக்கை வகைசெய்தது. வடக்கில் ஒரு பிரதேச சபையை, கிழக்கில் ஒன்றிற்கு மேற்பட்ட பிரதேச சபைகளை அமைக்கவும், இவை வடக்கு பிரதேச சபையுடன் இணைந்து செயற்படத்தீர்மானித்தால் இவையனைத்தும் இணைந்து ஒரே பிரதேச சபையாக இயங்குவதற்கு இந்த உடன்படிக்கை வகைசெய்தது.

இந்த உடன்படிக்கைக்கு- ஜே. ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிர்ப்புத் தெரிவித்துக் கண்டிக்கு பாதயாத்திரையும் மேற்கொள்ளப்பட்டது. பண்டாவின் அமைச்சரவைக்குள்ளும் எதிர்ப்புக் கிளம்பியது. பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட பின்னர் ஆட்சிக்கு வந்த திருமதி பண்டாரநாயக்க, பண்டா - செல்வா உடன்படிக்கை பற்றிய பேச்சை எடுக்கவே மறுத்தார். 1965 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கியதேசியக்கட்சியின் டட்லி சேனாநாயக்கா, தந்தை செல்வாவுடன் பிரதேச சபைகள் என்ற வார்த்தையை உபயோகிக்காமலேயே ஓர் ஒப்பந்தம் செய்தார்.

அதை சிறிமாவின் சுதந்திரக்கட்சியும், இடதுசாரிகளும் எதிர்த்து அந்த ஒப்பந்தத்தை கிழிக்கச் செய்தனர்.

தமிழ் மக்கள் சாத்வீகப்போராட்டம் நடத்திய காலத்தில் ஒப்பந்தங்கள் செய்யவும், இதை மாற்றுக் கட்சியினர் எதிர்ப்பதும் பின் அவை கிழிக்கப்படுவதும் தென்னிலங்கை அரசியலில் ஒரு சித்துவிளையாட்டாக இருந்தது.

இனி இந்த அரசியல் சித்து விளையாட்டை தென்னிலங்கை அரசியல்வாதிகளும், கட்சிகளும் தங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளட்டும். இனி தமிழ்மக்களைப் பகடைக் காய்களாக வைத்து அவர்கள் அரசியல் விளையாட முடியாது.

இதைத்தான் தமிழர் தலைவர் வே. பிரபாகரன் தனது இவ்வருட மாவீரர்தின உரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இதை மற்றையவர்கள் புரிந்துகொண்டார்களோ இல்லையோ, சுதந்திரக்கட்சியின் உண்மையை அஞ்சமாமல் எடுத்துச்சொல்லும் எச். எம். பௌசி புரிந்துகொண்டு சொல்லியிருக்கிறார்.

தென்னிலங்கையில் அரசியல் கட்சிகள் தங்களுக்குள் ஒரு முடிவு செய்யாமல் முட்டிமோதி தாங்களாகவே தமிழீழத்தை கொடுத்துவிடுவார்கள் என்பதே பிரபாகரன் உரையின் சாராம்சம் என்று - பௌசி சொல்லியிருக்கிறார்.

தந்தை செல்வா சொன்னது தம்பியினால் நிறைவேறிக்கொண்டிருக்கிறது.


கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன்
கலாசார உத்தியோகத்தர் கலையகம்
நடாத்தும் வருடாந்த
**யாழ்.மாவட்டக் கலாசார விழா - 2003**

கொமர்ஷல் வங்கி

இடம் :- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் :- 29.11.2003 சனிக்கிழமை பி.ப.1.00 மணி
30.11.2003 ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணி

**ஊர்வலம்**

காவடி, கரகம், கோலாட்டம், மயிலாட்டம், கம்படி, சிலம்படி, பொய்க்கால் குதிரையாட்டம், தமிழ் மன்னர்கள் வேடம் தாங்கிய கலாசார ஊர்வலம் வண்ணார்பண்ணை சிவன்கோவிலில் இருந்து ஆரம்பமாகி விழா மண்டபம்வரை நடைபெறும்.

**விழா**

வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்கள், வசந்தன் கூத்து, ஒயிலாட்டம், கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், பட்டிமண்டபம், கவியரங்கம், இன்னிசைக் கச்சேரி எனப்பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அனைவரும் திரண்டு வருக!
கலையின்பம் பெறுக!

கலாசார உத்தியோகத்தர் கலையகம்,
யாழ்.மாவட்டம்.
(சி-1838)


யுனிசெவ் அனுசரணையில் - அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்திய

# உலக எயிட்ஸ் தினத்தையொட்டிய மாபெரும் பரிசுப்போட்டி - 2003

### வினா விடைப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம்

**யாழ்வலயம் - பாடசாலை மட்டம்**

1 ஆம் இடம் ஜே.ஜெறின் நிஷானி (யா/திருக்குடும்ப கன்னியர்மடம்), 2 ஆம் இடம் கு.குமணன் (யா/இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் சி.துஸ்யந்தன் (யா/கோப்பாய் கிஸ்தவக் கல்லூரி)

**தனியார் மட்டம்**

1 ஆம் இடம் ஜே.என்.றொஷான், 2 ஆம் இடம் சே.வெர்ஜினியா நிஷானி, 3 ஆம் இடம் இ.விநோதன்.

**வடமராட்சி வலயம் - பாடசாலை மட்டம்**

1 ஆம் இடம் ஸ்ரீ.பகீரதன் (ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை), 2 ஆம் இடம் நா.தாட்சாயினி (யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை), 3 ஆம் இடம் இ.வசிகரன் (யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

**தனியார் மட்டம்**

1 ஆம் இடம் க.அகிலா, 2 ஆம் இடம் வ.சுதர்சினி, 3 ஆம்இடம் கு.றோய் நிக்ஷன்

**வலிகாமம் வலயம் - பாடசாலை மட்டம்**

1 ஆம் இடம் சி.பாலேந்திரன் (யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), 2 ஆம் இடம் க.நதியா (யா/மல்லாகம் மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் தெ.குவைத் (யாழ் விக்ரோரியாக் கல்லூரி)

**தனியார் மட்டம்**

1 ஆம் இடம் பொ.சயிர்த்தினி, 2 ஆம் இடம் மா.போ.சஞ்சீவன், 3 ஆம் இடம் ந.கார்த்திக்.

**தென்மராட்சி வலயம்-பாடசாலை மட்டம்**

1 ஆம் இடம் க.சிவாசினி (யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் ந.சங்கீதன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் பபுஸ்பலதா (யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்)

**தனியார் மட்டம்**

1 ஆம் இடம் சி.துசா, 2 ஆம் இடம் து.சுபாசினி, 3 ஆம் இடம் வே.யசோதினி.

**தீவக வலயம் - பாடசாலை மட்டம்**

1 ஆம் இடம் சி.அருட்சுதன் (சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் ப.சந்திரவதனா (கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வித்தியாலயம்), 3 ஆம் இடம் சு.சர்மினி (சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம்)

**தனியார் மட்டம்**

1 ஆம் இடம் பயஸ் யூஜின் ஞனாந்தராஜ், 2 ஆம் இடம் எஸ்.தனுசன், 3 ஆம் இடம் எம்.யூடித் உவீமியா

**வெளிமாவட்டம் -பாடசாலை மட்டம்**

ஆறுதல் பரிசு சுகந்தினி ஜேடி எட்வின் (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**தனியார் மட்டம்**

ஆறுதல் பரிசு ந.மேனகா, இ.திருப்பரன்.

### ஓவியப்போட்டியில் பரிசுபெற்றோர் விபரம்.

**மாவட்ட ரீதியில் - பாடசாலை மட்டம்**

1ஆம் இடம் சி.சிற்பரசன் (வைத்தீஸ்வராக் கல்லூரி), 2 ஆம் இடம் பா.சுரேஷ்கண்ணா (இணுவில் மத்திய கல்லூரி), 3 ஆம் இடம் தி.சசிகரன் (யா/டிறிபேக் கல்லூரி).

**தனியார் மட்டம்**

1ம் இடம் க.சிவசுதன், 2 ஆம் இடம் செ.ஜெனனி, 3 ஆம் இடம் ர.பிரகாஸ்

**யாழ் வலயம் - பாடசாலை மட்டம்**

1 ஆம் இடம் ஜோ.கரியற் ஜெயசாந்தி (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), 2 ஆம் இடம் ஸ்ரீ.வாசீகன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), 3 ஆம் இடம் சி.சிவகரன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

**தனியார் மட்டம்**

1ம் இடம் அ.அருள்சஞ்சீத், 2 ஆம் இடம் ச.சாரூபா, 3 ஆம் இடம் பா.குகப்பிரசாதன்

**வடமராட்சி வலயம்-பாடசாலை மட்டம்**

1 ஆம் இடம் - எஸ்.பிரசன்னா (யா/ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம நா.விஜயகுமார் (யா/விக்கினேஸ்வராக் கல்லூரி), 3 ஆம் இடம் த.பிரதாப் (யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை)

**தனியார் மட்டம்**

1 ஆம் இடம் சி.ஜெகதீபன், 2 ஆம் இடம் ஆ.நித்திலவர்மன், 3 ஆம் இடம் பா.மாலினி

**வலிகாமம் வலயம்-பாடசாலை மட்டம்**

1 ஆம் இடம் அ.மனோகரன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), 2 ஆம் இடம் நா.பிரதீப் (மானிப்பாய் மொமேறியல் ஆங்கிலப் பாடசாலை), 3 ஆம் இடம் மு.நிஷாளினி (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**தனியார் மட்டம்**

1 ஆம் இடம் அ.கிறிஸ்ரா நிஷாந்தினி, 2 ஆம் இடம் ம.சைமன், 3 ஆம் இடம் த.கபேசன்.


# பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்ட வருவாய்ப் பகுதி ஆளுகையிலுள்ள சந்தைகளுக்கு கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆண்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையரின் தன்வரலாறு (சுயவிபரம்) அடங்கிய விளக்கங்களை 2003.12.08 ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

**பணிநிலைகள்**

01. வரி அறவீட்டாளர்.
02. எழுதுநர்.

**தகைமைகள்**

**பணிநிலை - 01**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை : 18 - 40

**பணிநிலை - 02**

01. க.பொ.த.உயர்தரம் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை : 18 - 40

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:**
அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப் பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்,**
நாள்: 2003.12.11
நேரம்: காலை 9.00 மணி
இடம்: வருவாய்ப் பகுதிச் செயலகம்,
செயலகம், யாழ்.சாலை, பளை.

குறிப்பு: 01. நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
02. நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல்வேண்டும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு, வருவாய்ப்பகுதி.
(537)

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படாவிட்டால் மீளவும் யுத்தம் ஏற்படும் அபாயம் தோன்றலாம்!

## பொ.ஐ.மு. எம்.பி பௌசி எச்சரிக்கை

தென்பகுதியின் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் மீண்டும் யுத்தம் ஏற்படும் அபாயம் தோன்றவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தினத்தில் ஆற்றிய உரை தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்கத் தயங்கின், தனிநாடு அமைப்பதைத்தவிர வேறு வழியில்லை என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

எனவே - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து முன்வர வேண்டும். இல்லையெனின் மீண்டும் நாட்டில் ஒரு யுத்தம் ஏற்படும் நிலை தோன்றலாம். எனவே - உடனடியாகப் பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும். அப்போதுதான் சர்வதேச ஆதரவு கிடைக்கும் என்றார். (01)

## நாற்சந்தி

'சகல தேசாபிமானிகளும் ஒன்றிணைந்து வெளிநாட்டுத் தலையீட்டை தடுக்கவேண்டும் என்றெல்லே விமல் வீரவன்ச சொல்கிறார்'

'நாட்டுப் பற்றாளரைச் சேர்க்காத அரசு தேசிய அரசாக அமையாதாம், வெற்றியும் பெறாதாம் என்றெல்லே திலக் கருணாரத்தின கூறுகிறார்.

'தேசாபிமானிகள் என்றால் யார்?' 'நாட்டுப்பற்றாளர் என்றால் எவர்?'

'இவ்வளவு நாளும் சமாதான முயற்சிகளில் அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகளின் தலையீட்டை எதிர்த்தவர்களில் ஜே.வி.பியினரும்... சிஹலஉறுமயக்காரரும் தானே பிரதானமானவர்கள்'

'பிறகென்ன அவர்கள்தான் தேசாபிமானிகள்...'

'ஆனால் அவர்கள் இந்தியாவின் தலையீட்டை ஆதரித்தார்களே...

'அப்பஅவர்கள் தேசாபிமானிகள் அல்ல...'

'தேசிய அரசு என்றால் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கியதேசியக்கட்சியும் இணங்கி ஏற்படுத்தும் ஒன்றுதானே...!'

'ஓமோம'

'அவர்கள் சர்வதேச சமாதான ஏற்பாட்டாளர்களை ஆதரிக்கிறார்களா? எதிர்க்கிறார்களா...?'

'ஆதரிக்கவும் செய்கிறார்கள் எதிர்க்கவும் செய்கிறார்கள'

'அப்படியானால் அவர்கள் அரைகுறை நாட்டுப்பற்றாளர்கள்தானே...!'

அப்படித்தான் சொல்லவேண்டும்...'

'அப்படியானால் அரைகுறை நாட்டுப்பற்றாளர்கள் அமைக்கும் தேசிய அரசியல் முழு நாட்டுப்பற்றாளர்கள் என்று தம்மைத்தாமே கூறிக்கொள்ளும்... சிஹலஉறுமய சேரவிரும்பலாமா?'

'கூடவே கூடாது'

'அப்படியானால் இந்த தேசாபிமானிகளும், நாட்டுப்பற்றாளர்களும் என்னதான் செய்யப்போகிறார்களாம்'

'வழமைபோல் அறிக்கை விடுவார்கள்... பேரணி நடத்துவார்கள், எதிர்ப்புத் தெரிவிப்பார்கள்...'

'அவ்வளவுதானா...?'

'தேசிய அரசில் பதவியேதும் கிடைத்தால் நாட்டுப்பற்றையும் தேசாபிமானத்தையும் கைவிட்டு பதவியே சரணம் என்று இருந்துவிடுவார்கள்'

-தெருவாசி

## பரிசளிப்பும் கலைவிழாவும்

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாவும், இன்று பி.ப 2.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி.சிவச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு, வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) சி.நந்தகுமார் பிரதம விருந்தினராகவும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், கௌரவ விருந்தினராகவும், வடமராட்சிக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இ.தாயகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சிறிலங்கா எயர்லைன்ஸ் சேவை இந்திய நகரங்களுக்கும் அதிகரிப்பு

சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் இந்திய நகரங்களுக்கான விமான சேவைகளை அதிகரிக்கவுள்ளது. இந்தியாவுடனான திறந்த வான் கொள்கையில் அடிப்படையிலேயே இந்த விமான சேவை அதிகரிப்பு இடம்பெறவுள்ளது. இதனடிப்படையில், அடுத்த மூன்று மாதங்களுக்கு இந்த அதிகரித்த விமான சேவைகள் இடம்பெறவுள்ளன. புதுடெல்கி, மும்பாய், பெங்களூர், சென்னை, திருச்சி ஆகிய நகரங்களுக்கு ஒரு விமான சேவை மேலதிகமாக இடம் பெறவுள்ளது.

## போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம்!

### எதிர்வரும் 31 இற்குள் விண்ணப்பம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு, போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை அடுத்தமாத இறுதிக்குள் கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் செயலாளர் கே.சி. நாணயக்கார தெரிவித்தார்.

ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சையை அடுத்த ஆண்டின் முதல் வாரத்தில் நடாத்துவதென்றும், இதற்கான நேர்முகப் பரீட்சையை பெப்ரவரி முதல் வாரத்தில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் இரண்டாம் தவணையளவில் ஆசிரியர் நியமனம் வழங்கவிருப்பதாகவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

### கொமன்...

அங்கம் வகிக்கின்றன. இன்றைய நிலையில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்கு அடுத்ததாக இருப்பது இநத கொமன்வெல்த் செயலாளர் பதவியேயாகும். தற்போதைய கொமன்வெல்த் செயலாளர் டொன்மக்கினனின் பதவிக்காலம் இன்னும் மூன்று வாரங்களில் பூர்த்தியாகவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இசற் ஸ்கோர் வெட்டுப்புள்ளிமுறையால் மருத்துவபீட அனுமதி கிடைக்கவில்லை!

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

இசற்ஸ்கோர் வெட்டுப்புள்ளியால தனக்கு மருத்துவபீட அனுமதிகிடைக்கவில்லை எனத் தெரிவித்து யாழ். மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கே.கே.எஸ்.வீதியைச் சேர்ந்த எஸ்.ஞானக்குமரன் என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருப்பதாவது,

கடந்த 2001 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 2ஏ, 1பி சித்திகளைப் பெற்று இசற் ஸ்கோர் அடிப்படையில் 1.7927 எனக்கணிப்பிடப்பட்டிருந்தது. எனவும் மாவட்டநிலை 47 எனவும் இந்த முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

எனினும் மாவட்ட நிலையில் 48 ஆக இருப்பதாகவும் இசற்ஸ்கோர் அடிப்படையில் 1.7914 என மதிப்பிடப்பட்ட ஒருவர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்ததன் மூலம் மருத்துவபீடத்திற்கு தெரிவு செய்யப்பட் டுள்ளார்

நான் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்திராத போதிலும், எனக்கும் சரியான நியாயம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தேன். எனினும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியிருந்தும் நான் தெரிவு செய்யப்படாமை மனித உரிமை மீறலாகவே கருதுகிறேன். இதற்காக உரியநடவடிக்கை எடுத்து எனக்கு உரிமையைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் உரிய நடவடிக்கையை எடுத்திருப்பதாக அதன் யாழ் மாவட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறு பாதிக்கப்பட்ட மேலும் 16 மாணவர்கள் கொழும்பு உயர் நீதிமன்றில் மீண்டும் முறைப்பாடொன்றைச் செய்திருப்பதாகவும் தெரியவருகிறது. (ப)

### பிரதமர் ரணிலுடன்....

யின் மூலம் தகவல்களைப்பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்ட அதேவேளை, சமாதானச் செயலகத்தையும் பிரதமர் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சமாதான செயலணிக்கு சமாதான ஆலோசனை சபை (Advisory council of peace) மூலம் உதவிகள் செய்யப்படுமெனவும், இந்த சபையில் சகல அரசியற் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் பிரதிநிதித்துவம் செய்வதோடு - கிறிஸ்தவ மதகுருமார், தொழிலதிபர்கள் மற்றும் தேசியக் குழுக்கள் என்போர் இந்த ஆலோசனைச் சபையில் அங்கம் வகிப்பதோடு, எதிர்கால சமாதான முன்னேற்றத்திற்கும், இறுதித் தீர்வுக்குமான தமது பங்களிப்பினை இவர்கள் வழங்குவர்.

அத்துடன், பாதுகாப்பு தொடர்பான விடயங்களை - பாதுகாப்புச் செயலகம் ஊடாக தேவையான வகையில் ஜனாதிபதி வழங்குவார்.

பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் நேரடியாகவே போர்நிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்புடையது எனவும் - இதனை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கண்காணிக்குமெனவும் - இதனை ஜனாதிபதியின் கீழ் இருக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சு வர்த்தமானி மூலம் வெளியிடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாவற்றிற்கும் மேலான பொறுப்பில் ஜனாதிபதி இருப்பார். அத்துடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சு, சமாதானமுயற்சி, பாதுகாப்பு நிலைமை தொடர்பாக, ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் இணைப்பாக செயற்படும். நோர்வே அனுசரணையாளர்களை அவர்களது பணியைத் தொடர மீள அழைப்பதெனவும் - தற்போது நடைமுறையில் உள்ளது போல், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகளின்....

முன்னெடுத்துள்ள இடைக்கால நிர்வாக சபைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை தொடர்வதற்கு ஜனாதிபதி இணங்கினால் அதுபாரிய வெற்றி என்றும் காணிஅமைச்சர் ராஜித சேனாரத்தின தெரிவித்தார். (01)

TYPEWRITING AND SHORTHAND CLASSES FOR NEW BATCHES

These classes are commencing on Saturday, 6th December 2003 at 9.00 A.M at our Typing Centre, at 68, Clock Tower Road, Jaffna.

Those who are interested to follow these classes are requested to effect their registrations from 1st December 2003.

Please note that after completion of their course they will also receive training in the Computer on 'Word Processing'.

Director

INSTITUTE OF INFORMATICS STUDIES

68, Clock Tower Road, Jaffna. (சி-1822)

### முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு...

யிட்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் ஒருவர் - தமது கட்சி பிரிடடன், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய்ந்ததாக குறிப்பிட்டார். அத்துடன், சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படும் போது முஸ்லிம் தரப்பின் திட்டவரைபு முன்வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, இந்தியாவுக்கு செல்ல முன்னர் - அமைச்சர் ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரபாகரனின் மாவீரர்தின உரை...

பிரபாகரன்பற்றி தென்னிலங்கை மக்கள் மத்தியில் விசமப் பிரச்சாரங்களை செய்த இனவாதக் கட்சிகளின் நடவடிக்கைக்கு மறுப்பாகவே தலைவரின் உரை அமைந்துள்ளது.

உண்மையான விட்டுக்கொடுப்போடும் ஜனநாயகத்துக்காகவும் சமூக நலனுக்காகவும் செயற்படும் புலிகளை, சர்வதேச சமூகம் புரிந்துகொள்வதோடு, புலிகளைத் தடைசெய்துள்ள சர்வதேச நாடுகள் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து புலிகள் அமைபபை நீக்கிவிட வேணடும் என்றும் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

### கிறிஸ் பற்றனது கருத்துக்களை...

வரைபு சமஷ்டி அலகிற்கு அப்பால் சென்றுவிட்ட தெனவும் தெரிவித்துள்ளார். இந்தக் கூற்றுடனேயே நாம் உடன்படுகின்றோம்.

இருந்த போதிலும், பற்றன் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க இருந்தவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சியின் ஆதரவாளர்களும், அதற்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்ததுடன் பற்றனின் கொடும்பாவியையும் எரித்தனர். இது தொடர்பாக செய்தியாளர்கள் அமுனுகமவிடம் கேட்டபோது, அவர் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கை எதையும் பொதுஜன ஐக்கிய முன்னணி எடுக்கவில்லையெனத தெரிவித்ததுடன், இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் யார் என்பது தொடர்பாகப் பூரண விசாரணை நடத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1568 திகதி: 28.11.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| X | 2 | 3 | 3 | 3 | 7 | 4 |




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.